கடவுள் துணை.

# செந்தமிழ்

தொகுதி-௬] கீலக ௵ புரட்டாசி ௴ [பகுதி-௧௧.

## பாண்டியர்களும் தமிழ்ப்புலவர்களும்.

:o:

### பாகம் II.

ஐயரவர்கள் இவ்வருஷத்து அறிக்கைப்பத்திரத்தில்ஸ்ரீவைஷ்ணவ ஆழ்வார்களிலும் சிலரைக்குறித்துச் சொல்லப்புகுகின்றார். * அவை இதுகாறுமுள்ள எல்லா ஐதீகங்கட்கும், யுக்திபுத்திக்கு மெட்டாதவைகளாய், கேட்போர் மனதிற்குச் சமாதானமளிக்காதிருத்தலால் அவ்விஷயத்தையும் சற்று உற்று நோக்கி எமக்குத்தெரிந்தசிலவற்றைத் தெரியப்படுத்துவோம்.

காரிமாறன் என்னும் பெயர் காரிமகன் மாறன் என்னும் பொருளையுடையது. காரி, மாறன் என்னும் பெயர்கள் சதுர்த்தவர்ணத்தாரே தரித்துவந்தனரென்பது, மலையமான்திருமுடிக்காரி, மல்லிகிழான் காரியாதி,ஈரந்தூர் கிழான் தோயன் மாறன், காவிரிப்பூம்பட்டினத்துக்காரிக்கண்ணனார்,சித்திரமாடத்துத்துஞ்சியநெடுமாறன், கூடாரத்துத்துஞ்சியமாறன்வழுதிஎன்று இலக்கியத்திலும்;நெடுமாறன், மாறன்சடையன், சடையமாறன், மாறன்காரி என்று சாஸனங்களிற் காணப்படும் பெயர்களையும் நோக்கின் விளங்கும். இப்பெயர்களை அந்தணர் வகித்தாரில்லை என்பது திண்ணம். பிராமண உத்தியோகஸ்தர்கள் பண்டைக்காலத்தில் எப்பொழுதும் பிரம்மாதராயர் என்றே குறிக்கப்படுகின்றனர். புன்னமங்களத்து வொஜயோஜி ஸ்ரீவஷுஹனை ஸஃஹரவாணு)வ்யஹாயிராஜன் கேரளாந்தக சதுர்வேதிமங்கலத்து கிருஷ்ணன் இராமனை மும்முடி சோழ பிரம்ம மாராயன், தென்னவன் பிரம்ம மாராயன் என்பனபோன்றவைகளுட் கண்டு கொள்வது.

* An. Rep. for 1807—8; pp. 69.

இவ்வாறிருக்க, வேள்விகுடிச் சாஸநத்தில் ஆஞ்யாப்தியாயிருந்தவனும், ஆனைமலைச் சாஸநத்தில் உத்தர மந்திரியாயிருந்தவனும், மதுரதரமான பாடல்களைச் செய்யுந் திறமுடையானும், அதனால் மதுரகவி என்னும் பெயர் படைத்தவனும், கரவந்தபுரவாசியாய் வைத்தியகுலம் விளங்கவந்த மாறன்காரி (மாறன் மகன் காரி, மாறஸூநு) ஆகிய மூவேந்தமங்கலப்பேரரையன் பெயர்களைக்கண்ணுற்ற ஐயரவர்கள் உடனே இவரை மதுரகவியாழ்வார் என்று கொண்டுவிட்டார். அந்தோ! ஆழ்வார் முதல் வருணத்தவரல்லரோ? அவரைச் சதுர்த்தவர்ணத்தாராக்கினரே! பாவம். நம் அஞ்ஞானத்தாற் பிராமணரும் சூத்திரராய் விடுகின்றனர். ஐயரவர்கள், மனதில் ஒரு விஷயத்தைப்பற்றி ஓர் சித்தாந்தத்தைக்கொண்டுவிட்டு, பிறகு அதற்கு ஆதாரங்கள் தேடும் வழியுடையராதலின் அவர்க்குத் திருக்கோளூரிற் பிறந்தவராயினும், கரவந்தபுரத்திற் பிறந்தவராயினும், மதுரகவியென்னும் பெயரொற்றுமையாயிருப்பின் இருவரும் ஒருவரே யாவர். சாஸனத்திற் குறிப்பிட்ட மதுரகவி மாறங்காரி என்போன் கரவந்தபுரத்தான். (களக்காடு, களக்குடி) என்பது மதுராஸ் காட்சிச்சாலை சாஸநத்திலும், ஆனைமலைச்சாஸநத்திலும், திருப்பரங்குன்ற சாஸநத்திலும் வெட்டெனக்கூறியிருக்கிறது. ஆழ்வாரோ திருக்கோளூரிற் பிறந்து, நம்மாழ்வார் அவதாரத்துக்கு வெகுநாளைக்கு முந்தியே வடபாலுள்ள திவ்ய தேசயாத்திரைக்குச்சென்று, அவர் அவதாரமாய்ப் பலநாள் கழிந்தவாறே, குருகூர்ப்பிரதேசத்துக்கு வந்து, நம்மாழ்வாரை ஆசிரயித்தனர். இவை கிடக்க, சாஸநவகையா லுண்மைவெளிப்படுத்தும் ஐயரவர்கள், காரணமின்றியே, காலதேச வர்த்தமானங்களை யிகழ்ந்து, வலியற்ற தம் சித்தாந்தத்தை வெளியிடத்துணிந்தனர். இஃதன்றி, சாஸனத்தில் மதுரகவியென்னும் பெயர்படுமவன் மறுபெயர் மாறங்காரியாதலால், இவன் மகன் பெயர் காரிமாறனாக வேண்டுமென்றும், (இதுவரையிலும் ஐயரவர்கள் கூற்றுச் சரியே) இப்பெயரே நம்மாழ்வார் பெயராதலால், நம்மாழ்வார் மதுரகவியாழ்வார் புதல்வராகலாம் என்றும் ஐயுறுகிறார்கள். இவ்வூகம் ஐதிகத்தோடு முரண்படுவதைக் கண்டு அதற்கோர் சமாதானங்கற்பிக்கிறார். அஃதாவது:—மாறன் காரியாகிய மதுரகவியின் மகனான காரிமாறனென்னும் பெயரை

யுடைத்தாதல் மரபு. ஆஞ்யாப்தி மதுரகவியின் மகன் காரிமாற ஞயின், அன்னேன் காலத்துப் பிறந்தவரான நம்மாழ்வாருக்கு காரிமாறன் என்னுநாம மீந்திருக்கவேண்டும் என்பதே. மதுரகவியாழ்வார்க்கு மகப்பேறுண்டாயிற்று என்பது முதன் முதல் ஒப்புக்கொள்ளவேண்டும். அதன்பின்பு அம்மகன் பெயர் நம்மாழ்வார்க்கு வைக்கக்காரணமேதேனும் ஒன்றிருக்கவேண்டும். அதுவும் விளக்கப்படினன்றி ஒப்புக்கொள்ளமுடியாது. இவை கிடக்க,

நம்மாழ்வார் ஜனனகாலத்தில் மதுரகவியார் தென்தேயத்திலேயேயிருக்கவில்லை. ஆழ்வார் பிறந்ததும் அவர் அறியார்; இவரைப் பற்றி ஆழ்வார் தாய்தந்தையர்க்கும் ஒன்றுந்தெரியாது. இவ்வாறிருக்க இவர் மகன் பெயரை யாது காரணத்தால், நம்மாழ்வார்க்கு வைத்தாரென்று கொள்வது ? மேற்கூறியவற்றால் ஐயரவர்கள் எழுதியதெல்லாம் அறிக்கையைப்பெருக்கவென்றுதான் தீர்மானிக்க வேண்டுமேயன்றி சித்தாந்தப்படுத்தவேண்டு மென்னும் எண்ணமுடையவர்போலத் தோன்றவில்லை.

ஐயரவர்கள் இன்னெருவியாசத்தில் திருமங்கையார் கி. பி. 8-வது நூற்றூண்டிலிருந்திருக்கவேண்டும் என்று சொல்லியுள்ளார். அக்கூற்றும் இப்பொழுது நம்மாழ்வாரும் கி. பி. 8-வது நூற்றூண்டிருந்தார் என்னுங்கூற்றும்பொருந்தா. ஐதீகத்தோடு முரணுமேயென்று கருதி நம்மாழ்வார்க்கு 20, 30 வருஷங்கட்குப்பிற்பட்டவர்திருமங்கையாரென்று பையஎழுதிவிடுத்தார். காரணங்கள்கற்பிக்கவேயில்லை. அது காணுதவரை அவர்கள் எழுதியது எதற்குப் பயன்படும் என்பதை தமிழபிமானிகள் கண்டுகொள்ளவேண்டியது.

யான் சிலகாலத்துக்குமுன்பு இறையனாகப்பொருள்விஷயமாய் "செந்தமிழிலும்" சிலகாட்களுக்கு முன் இண்டியன் ஆண்டிகுவேரியிலும் எழுதி, முதன் நெடுமாறனைப்பற்றியும், அவனை சாஸனத்திற் கூறிய விஷயங்களோடு புணர்த்தி அவனின்னு னென்பதைப் பற்றியும் விளக்கியிருந்தேன் என்பது எல்லாருமறிவார். இவ்விஷயம் இப்போதுதாமே கண்டுபிடித்துவிட்டதுபோல தம் அறிக்கையில் எழுதிக்கொள்ளுகிறுர். இதற்குமுன்னொருகால் இவர் வரகுண பாண்டியனைப் பற்றித்திருவாசகத்தில் மாணிக்கவாசக ஸ்வாமிகள்

(அ௲) இந்நகர், வளத்தோனாகிய ஏகுவோன் றனக்கு வேடனுரைசெய்தமையால், வகுத்துப்போக்கிக் குடியிருத்தின கொள்கையால் விளங்கும் என்க.

(அசு) தண்ணிய காஞ்சிமரத்தின் மெல்லிய சினையாகிய பூங்கொம்பர் நிருத்தத்தைப் பொருந்தி அசைய, அதன் பக்கத்தே வண்டுகள் தங்கி இசை பொருந்தக் காஞ்சிப்பண்ணைப்பாடும் வயல் சூழ்ந்த புணையாகிய மருதவேலியைப் புடையிலுடையதாய்ப் பூமியின் மிக்க காஞ்சிநகரின் அடியுறுப்பமைந்த மதிலைச்சூழ்ந்த அகழியானது தெய்வத்தன்மை பொருந்திய ஒலிக்கின்ற வேதமாகிய வளவிய மேகலை யணிந்த அல்குலையுடைய காமாக்ஷியம்மையின்து இருபா சமுத்திரமானது காக்கும்படி உலகைச் சூழ்ந்திருத்தலை யொக்கும். காஞ்சி நகரை உலகும் அகழைக்கருணைக் கடலுமாக்குக.

(அஎ) பூசைத்தானத்தைக் காத்தற்கு அவர் தந்த ஆகமவிதியின்படி செய்த மந்திர ரூபமாகிய அக்கினிக் கோட்டையைச் சூழ்ந்த அகழின் வகுப்பைப் போலும். மலரையுடைய இவ்வகழியானது கடலைப் போலும்: வகுப்பைப்போலும் மலர்க்கிடங்கு கடலைப் போலுமென முடிக்க.

(அஅ) வாயிலானது பெரியோருள்ளம்போல ஓங்கு நிலைத்தன்மையவாய்த், தடையுமாகி நிலவி ஒளியால் வானளப்பனவாந் தகையவாகும். செந்நெறி, பலவற்றுள்ளும் மிக்கு விளங்கும் உண்மையான திருந்திய சைவமார்க்கமும் நல்வழியும் என்க. உள்ளம்போல என்பதற்கு- உள்ளமழியாதவாறுபோல என்க. ஒழுக்கம்-சைவாசாரம். தீங்கு நெறி-புறச்சமயம். நெடுவானென்றது சடாகாசத்தையும் சிதாகாசத்தையு மென்க.

(அகூ) இவைகளும் மற்றுமமைந்த அணிநகர், இவை அமைந்துடைமையால், நவகண்டமன்றி அநேக கண்டமுடையதாய் அத்தன்மையான வேறொரு பேருலகு தன்னிலுள்ளதென்று சொல்லும்படி விளங்கியும் இந்த மாலோகத்தினிலையையே மேவியது.

(கூ0) பயில் வீதி, துதைந்த வீதி எனத்தனித்தனி கூட்டுக. வீதியானது விளங்கினாற்போலு மெனமுடிக்க. குழாங்கள் அலையும்படி தூக்கிய கோவை முத்தினீர்மை மாகத்தினிடையே தழைப்ப

மன்னி இருந்து மருங்கிலுடுக்களிலேய இடையே முகிலைக் கிழித்தொ ழுகுங் கங்கா நதிகள் பல பூமியில் விளங்கினுற்போலும். கூந்தல் - முகில். முத்து - தாரகை. அவைகளினுெளி துதைந்த வீதிகள் நதி கள். மாடநிரை மாகம் என்க.

(கூக) கனகமயந்தானுய் நீடுமாளிகையுமுள, மற்றமறுகுதோ றும் எனமுடிக்க. கீழ்நிலையின்மாடு ஓர் நீலரத்தின-த்தினுய சோபான த்தைப்பொருந்தும்படி கொள்ளஅமைத்து, உச்சியிலொருபாற் கன்ன த்தில் சாலையை வைரத்தாலமைத்தமையால், பிழம்பானுரைத்தேடி ஆனுனும் எழுந்தானும்போல நீடுமாளிகை என்க. கனக மாளிகை பிழம்பான சிவன். அதனடியிலுள்ள நீலச் சோபானம் விட்டுணுவா கிய பன்றி. மேலுள்ள வைரத்தாலாகிய சாலை பிரமனுகிய அன் னம் என்க.

(கூஉ) மாடம் அடியவருமனையனவாக அலகிலாதன அங்ஙகரி லுள்ளன எனமுடிக்க. மாடமானது தன் மிசைப்பயிலும். செக்கர் நிறப்பொழுது மாலைக்காலம். அன்பினுலுருகித் தேகத்தில் ஒழுகு ம்படி கண்ணீரைச் சொரியும் அடியவர்.

(கூ௩-ஆம் பாட்டுமுதல் கஉஅ-ம் பாட்டுவரை உரை எழுதப்ப டவில்லை.)

உ

திருச்சிற்றம்பலம்.

# சண்டேசுர நாயனுர் புராணம்.

(க) வரைகிழிய நிலைகாட்டி எனக்கூட்டுக. சேர்ந்தனளித்த மூதூர் - சேய்ஞலூர். சேய் நல்லூர், சேய்ஞ்ஞலூர் எனப் போலியா யிற்று. சேய் - சுப்பிரமணியக்கடவுள். (உ) அறு தொழிலாகிய மெய்ம்மையையுடைய ஒழுக்கத்தை.

(௩) குற்றமற்ற மான்றோல் விளங்குகின்ற முறுக்குப் பொரு ந்திய பூணூல் விளங்கும் மார்பினையும் குழைத்த குடுமியையுமுடைய படிக்கின்ற பக்கத்திற் சூழ்கின்ற சிறுவர்களும் ஆசிரியனும் தாரகை யையும் மதியையும்போலப் பொருந்திய மடங்கள் முகில்களொதுங்க வேதவொலிகள் முழங்குவன. மடங்கள் முழங்குவன, என இட மே கருத்தாவாயிற்று.

(௬) அன்னமுங் கலுழனும் ஆகாயத்தை நீங்கி வந்திருக்குஞ் சேக்கை போலவும், யானையை யணைக்கின்ற கந்தைப்போலவும், நாட்டிய யாகத் தம்பங்களின் கூட்டமுள்ளன.

(௫) யாகப்பசுக்கள் காலந்தோறும் இனிய பாலொழுகச் செல்வனவும், தாம்பாடின சாமவேதத்தைச்சிந்திப்போர் சமிதை யிடும்படி கொண்டு வருவனவும், பொலிவாகிய பசிய இலைகளையுடைய நீர் பொருந்திய தடாகத்திலே ஸ்நானஞ்செய்து பார்ப்பனிகள் வருவனவும் ஆகும் பாகுபாட்டில் விளங்குவனவாய அழகிய நெடிய வீதிகள் பல உள்ளன.

(௬) தாழ்வு - சார்பு. குலை - கரை. தேர்களும் விமானங்களும் நெருங்கியுள. வேள்வித்தலைவர் - யாகாதிகாரிகள்.

(௭) நடக்கும் வழியிற் படர்கின்ற முல்லைக் கொடியி னரும்புகளாலே கொம்பர்களையுடைய காஞ்சி மரங்கள் விளங்கும். முல்லைக்கும் மருதத்திற்கும் மயக்கங் கூறியவாறு.

(௮) அச்சேய்ஞலூர், சென்னி, அபயன் என்னும் பொதுப் பெயர்களையுடைய குலோத்துங்க சோழனும், சிதம்பரத்தின் அழகிய எல்லையைப் பொன்மயமாக்கிய சோழர்களுட் போரேறு போன்றவனும், என்றும் பூமியைக் காக்கின்ற மன்னர் பெருமானுமாகிய அநபாய சோழன் வந்த பழைய மரபின்படி முடிசூட்டுகின்ற தன்மை விளங்கும் ஐந்து ராஜதானிகளுள் ஒன்றாய் விளங்குந் தன்மையையுடையது. ஐந்திராஜதானிகளிலும் வைத்து முடிசூட்டுவர் என்பதூஉம் இதன் கருத்தாகக் கொள்க. இராஜதானி ஐந்தாவன:— காவிரிப்பூம்பட்டினம், கருவூர், திருவாரூர், உறையூர், திருச்சேய்ஞலூர் என்பன.

(௧௦) மனை வாழ்தருமம் - இல்வாழ்க்கை. மணியையுங் கொடுப்பதாய் நஞ்சையுங் கொடுக்கும் பாம்புபோல.

(௧௧) அப்பிராமணருடைய திருமனைவி, வாய்ப்புற்ற மரபில் வந்து பிறந்தவள், சுற்றம் விரும்பும் இல்வாழ்க்கைத் தொழிலுடையாள், உலகத்திலுயிர்த்துணையாயுள்ள ஒரு புதல்வனைப் பெற்று விளங்குந்தவத்தைச் செய்தவள், பெரும்பேற்றின் முடிவான பிரயோஜ

ணத்தைப் பெறுபவள், பற்றை யெறியும் பற்றனது வர வழியாயுள் ள பவித்திரை. பற்றை எறியும் பற்று என்றது, முத்தியுபாயத்தை; 'பற்றுக' என்னுந் திருக்குறளின்படி. இனி 'பற்றை' எறியும் பற்று என்றது, துறந்தோரை; "துறந்தார்க்கும்" என்ற திருக்குறளின் படி என்பாருமுளர்.

(கங) மறைகளுட்பட ஆகமங்கள், விட்டகுறைத்தொடர்ச்சி யால் முகைகொண்டுமலரும் பூவில் வாசனையைப்போல மனம் மல ர உடன்மலர்கின்ற அழகிய அறிவு சிறந்தது. ஆகமங்கண் மலரு மறிவெனக் கூட்டுக.

(கச) அறிவிலிகழ்கின்ற முறைமையை யுடையனவல்லாத வெல்லாம் இவரிடத்தே பொருந்தியவாயினும், பெற்றார்கள் தம்மு டைய விளங்குமரபின் முறைப்படி வேதமோதுவிக்குஞ் செய்கை யைச் செய்வித்தார்கள்.

(கரு) நிறவு மறையோர்-கற்பிக்கின்ற ஆசிரியராகிய பிராம ணர். அளவிறந்த கலைஞானங்களின் பொருண்முடிவு கனகசபையில் நடிக்கும் பாதமே என மிகுந்த செலவுகொண்ட மனத்திற் றெளிந் தார் சிறியபருவத்திற் பெருந்தகையையுடைய விசாரசருமர்.

(கசா) நடனத்தைச் செய்கின்ற சிவந்த பாதங்களையுடைய சி வபிரானே நம்மை யாளாக உடையரெனும் மெய்ம்மையுடனே தோ ன்றும் அறிவின்கண் நீங்காமலூறுகின்ற வழியன்பின் முறைமை யே இயல்பாய் முதிர்ந்து வருகின்ற ஆசை மேன்மேல் எழுகின்ற எண்ணத்திட்பம் நேர்நிற்கும் விசாரசருமர். விளங்கும் நாளிலாங் கொருநாள்.

(கஎ) கிடை-மாணாக்கர். போற்றுமவன்-இடையன்.

(கஅ) கலைகளும் ஆகமநூற்பரப்பின் றொகுதியுமாகிய பகுதி களாகப்பொருந்தும் மேன்மையையுடைய அரியவேதங்கள்மூலமாக விளங்குமுலகில் எவைகளையும் இயல்பானறிந்த பொருளாகிய சிவ பிரானை நிலையாகப்பொருந்த அறிந்த தமது திருவுள்ளத்தினால் பசு வின்மகிமையை யுள்ளபடி அறிந்தவராகலின்.

(௨௦) பசுக்கள் திருமஞ்சனமைந்தையு மளிக்கு முரிமையை ஆயசிறப்பினாற் பெற்றனவல்லவா ?

(௨௧) கோக்குலங்கள் சிவபெருமான் சாத்தும் விபூதிக்குக் காரணமாய கோமயந்தோற்று முடம்பையுடையதாயின் முடிவென்னை ?

(௨௨) உழைமான் மறிக்கன்று-மான்கன்று.

(௨௩) இதம் - அப்பசுக்களின்பிரியம். கடனிதன்மேலில்லை. சிவபிரானுடைய பாதங்களை வழுத்தும் மார்க்கமாவதுமிதுவென்று.

(௨௬) பதவுகாலம்- பக்குவகாலம். இதமுண்டுறையும் - இதமாக உண்டு உறைகின்ற; நல்லதண்ணீரை உண்பித்து அச்சத்தை எதிரேநீக்கி. அதர் நல்லனமுன்செல்ல - நல்லனவாகிய வழிகளிலே முன்செல்லும்படி செய்து. பாலுதவும்பொழுது - பாலைக் கொடுக்குங்காலம்.

(௨௭) புறவு-முல்லைநிலம். படுகர்-நீர்நிலை. குலை-கரை. எரிநீக்கடைகோல்.

(௩௦) அனைத்துத்திறத்தும்-எல்லாவகையாலும்.

(௩௧) எம்மையுடையவள்ளலாரெய்தநினைந்து- நம்மையடிமையாகவுடைய சண்டேசுர நாயனார் பொருந்தக்கருதி. தெளிந்ததனின்-தெளிந்து அதனால்.

(௩௨) அவ்விடத்தில் முன்னையருச்சனையின் அளவின்றொடர்ச்சியினால் விளையாட்டாக. முன்னையளவினர்ச்சனை என்றுமாம்.

(௩௩) அருகில்வளரும் முல்லைநிலத்திற் பூத்த மலர்களைப்பார்த்து.

(௩௪) நவகும்பம்-புதியகுடங்கள். நாள்நற்பூங் கொல்லையிடத்தும், குறையாகியமறைவிடத்தும். குறை - ஆற்றிடைக்குறை, மணற்குறை. ஒருகால்-ஒருதரம்.

(௩௫) கொண்டுமடுத்த-கொண்டுவைத்த. பண்டைப்பயில்வு-விட்டகுறை.

(௩௬) அடிமைகொள்ள உரியார் தமதன்பரது அன்பின்பகுதியிலுளதாய மூளப்பொருந்தியவிருப்பம் முதிர்ந்த பற்றுமுதிரவகுத்த சிவலிங்கத்துள்ளே வியாபித்துக் குறித்த பூசனையைக் கைக்கொள்கின்றார்.

(௩௭) அன்பினினிரப்பி-மனோபாவனையால் முடித்து.

(௩௯) செயல்-செயலை; சிறந்த பூசனையாகிய செயலைச் செய்வதற்கு.

(௪0) பொச்சம்-வஞ்சம். மாணவகன்-பிரமசாரியினது.

(௪௧) வந்தபரிசு-தன்மனத்திற்றோன்றியபிரகாரம்.

(௪௩) குறைகொண்டு-குறைவேண்டி.

(௪௪) அந்திதொழுது-அந்திக்காலசந்தியைமுடித்து. பழியொன்று வந்ததெனநினைந்து, தன்புதல்வனுக்குச் சொல்லானாய்.

(௪௬) பிரமசாரிகள்-சண்டேசுர நாயனார். மூழ்கி - ஸ்நானஞ்செய்து. முலைபொழிந்த பாலைநிறைத்த குடங்களைப் பேணைப்படுமிடத்திற்கொடுவந்து வைத்து.

(௪௭) நிலைபெற்ற ஆகமவிதியையுடைய விளையாட்டாகிய அரிய நிறைந்த பூசனையைத்தொடங்கி.

(௪௮) ஸ்தோத்திரஞ்செய்ய மேலும் மேலும் எழுகின்ற அன்பையும் பழையதன்மை மிகுங் குணத்தையும்பொருந்திய மேன்மைதக்கோரிடத்துமேவும் பெருமையை வெளிப்படுத்தும்படி சிவனுடைய திருவருளைப்போல, அறிவழிந்து குரவமரத்திருந்த எச்சதத்தன் கோபம் பொருந்துமாறுகண்டான்.

(௪௯) மிகுந்தவிருப்பையுடைய மனத்தை.

(௫0) கையாற் கடைமைத்தலைநின்றான் - அவ்விடறிச்சிந்துதலாகிய தீயொழுக்கத்தினாற் பாவத்தின் முடிவில் நின்றான். இனிக் கையாலே செய்கின்ற கடமையால் நின்றவன் என்று பொருள்கூறி, கையாற்செய்யுங் கடமையாவது அபிடேகம் செய்தல் எனத் தாற்பரியங்கூறுவாருமுளர்; இதற்குக்கடமைத்தலை என்பது பாடமாகக் கொள்க.

(௫௨) புகுதல்-தொடங்குதல்.

(௫௬) உண்டகலம் - பரிகலசேஷம். கலமும் உடுப்பனவும், சூடுவனவும் அனைத்தும் உனக்காகத்தந்தோம், சண்டேசனுமாம்பதந் தந்தோம்.

(௫௭) அணைந்தார்-சண்டேசபதத்தை அடைந்தார்.

(௫௮) மூலமுதல்வர் - அநாதிமுதல்வர்; முதற்காரணராகிய முதல்வரென்றுமாம்.

(௬0) திருவாளன்-சுந்தரமூர்த்தி நாயனார்.

---

# நல்லொழுக்கம்.

[ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்ப்பு.]

—:o:—

(முற்றொடர்ச்சி.)

லேடி பிராங்கிலின் (Lady Franklin) உடைய தைரியத்தை நாம் மறக்கக்கூடாது. பிராங்கிலின் (Franklin) உடைய யாத்திரைக்குப் பின்னர்த் தேடிச்சென்று, நம்பிக்கையற்று அனேகர் கைவிட்டபொழுது, கடைசிவரையும் அவள் விடாது முயற்சித்தனள். ராயல் ஜியாகிரபிக்கல் சங்கத்தார் (Royal Geogrophical soceity) லேடி பிராங்கிலின் (Lady Farnklin) க்கு, பௌண்டர்ஸ் மெடல் (Founder's Medal) என்னும் வெகுமானத்தைக் அளிக்கத்தீர்மானித்த சமயத்தில், ஸர் ராடெரிக் மர்ச்சிஸன் (Sir Roderik Murchison) என்பவர் அவளுடன் தமக்கு நிகழ்ந்த வெகுநாளை இஷ்டத்தில், ஸ்திரீகளுக்குரிய சுத்தமான குணங்களைக்கண்டு பரீக்ஷிப்பதற்கு மிகுதியான சமயங்கள் தமக்கு வாய்த்திருந்த தென்றும், அதில் அவள் மனிதரால் வியக்கத்தக்க பாத்திரமாகக் காணப்பட்டாள் என்றும் சொன்னார். நீண்ட பன்னிரண்டு வருஷகாலம் தாழ்த்தநம்பிக்கையாற் றோல்வியின்மீது தோல்விவந்தும் எவ்வளவும் இளையாதவளாய், உள்ளவாறே ஒப்புமையில்லாத ஒரே கருத்தும், உண்மையானபற்றுதலும் கொண்டு விடாமுயற்சி கொண்டிருந்தனள். வீரமு

ள்ள, கிளின்டாக் (M' Clintock) நடத்திய பாக்ஸ் (Fox) கப்பலில் அவளுடைய கடைசியாத்திரை மூலமாய், அவளுடைய கணவன், முன்கப்பல் யாத்திரைக்காரருக்குத் தெரியாமலிருந்த பெரிய கடலிற் பிரவேசித்து, வடமேற்குப் பாதையைக்கண்டு பிடிப்பதில் இறந்து விட்டானென்ற இரண்டு பெரிய சங்கதிகள் புலப்பட்டன. ஆகவே இந்தப்பரிசானது கீர்த்திபெற்ற பிராங்கிலின் (Franklin) உடைய மனைவிக்கு விசேஷ உரிமைப்பட்ட பல வெகுமானங்களில் ஒன்றாக அந்த ஜாதியாரால் புகழ்ந்து கொண்டாடப்பட்டது.

ஆனால், சுத்த வீரத்தன்மைக்கு லட்சணமாகிய கடமையோடு கூடியபற்றுதலானது, தர்மமும் இரக்கமுமான செய்கைகளிற் பலமுறை ஸ்திரீகளாற் காட்டப்பட்டிருக்கின்றது. பெரும்பாலும் இவைகளைப்பற்றித் தெரிய வருவதில்லை. ஏனென்றால் வெளியிலுள்ளவர்களுக்குப் புலப்படாமலும், நன்மையை நேசித்தலே பயனைக் கருதியும், அந்தரங்கமாகச் செய்யப்பட்டுள்ளன. அதிக வியாபக விஷயங்களில் அவர்கள் செய்த முயற்சிபற்றிய சித்தியால் அவர்களுக்குக் கீர்த்தியுண்டான இடமெல்லாம், அது, தேடாமலும் எதிர்பாராமலும் உண்டாகிப் பெரும்பான்மையும் ஓர் சுமையாக உணரப்பட்டிருக்கின்றது. சிறைச்சாலையைப்போய்ப் பார்த்துச் சீர்திருத்தம் செய்த மிஸ்ட்ரஸ் பிரை (Mrs Fry) ஐயும் மிஸ் கார்ப்பெண்டர் (Miss Carpender) ஐயும் பற்றி யார்தான் கேள்விப்பட்டதில்லை. அயலிடங்களிற் போய்ப்பிழைப்பதை விருத்திசெய்த மிஸ்ட்ரஸ் சிஸ்ஹால்ம் (Mrs: Chisholm) ஐயும் மிஸ் ரை, (Miss: Rye) ஐயும் பற்றிக்கேள்விப்படாதார் யார்? ஆஸ்பத்திரி (வைத்தியசாலை) யில் நோயாளிகளை வளர்ப்பதில் தேவதூதர்களைப் போன்ற மிஸ் நைட்டிங்கேல் (Miss Nightingale) மிஸ் காரட் (Miss Garret) ஆகிய இவர்களை அறியாதவர் யார்?

இந்த ஸ்திரீகள் சொந்தக்காரியமாகிய குடும்பநடப்பினின்றே பரோபகாரத்தில் தலைப்பட்டவர்களாய்க் கிளம்பியிருப்பதானது. அவர்களுடைய சன்மார்க்க தைரியத்தைப் பெரிதும் விளக்குகின்றது. ஏனென்றால் மற்றவர்களைவிட ஸ்திரீகளுக்கு அமைதியிலும் சுகசௌக்கியத்திலும், வேலையைவிட்டொழிதலிலும், விருப்பமிகு

ந்திருப்பது இயற்கை. தங்கள் கிருககிருத்ய வரம்புகடந்து வெகு ஜன உபகார விஷயங்களிற் பிரவேசிக்கும் ஸ்திரீகள் வெகு சொற்பம். ஆனால் ஒன்றில் அவர்களுக்குப் பற்று உண்டாயின் அதனைக் கண்டுபிடித்தல், அவர்களுக்குப் பிரயாசமன்று. புருஷர்களும் ஸ்திரீகளும் தம்மை அடுத்தவர்க்கு உதவிசெய்வதற்குப் பலமார்க்கங்கள் உண்டு. மனப்பூர்வமான சித்தமும் தடையற்ற கையுந்தான் வேண்டும். ஆகிலும் நாம் சொல்லிய பரோபகார காரியஸ்தர்களில் அனேகர் வேண்டுமென்று தெரிந்தெடுத்துச் செய்தவரல்லர். தங்கள் மார்க்கத்திற் கடமையானது குறுக்கிட்டது. அது தங்களுக்கு அனுகியதாகவும் தோற்றியது. தங்கள் மனச்சாக்ஷியின் திருப்திக்கன்றி, புகழ்ச்சி அல்லது வேறெந்த வெகுமானத்தையும் விரும்பாமல் அவர்கள் வேலைசெய்ய ஆரம்பித்தார்கள்.

சிறைச்சாலையைப் போய்ப் பார்த்தவர்களில் 'சாரா மார்ட்டின்' (Sarah Martin) என்பவள் மிஸ்டிரஸ் பிரை (Mrs. Fry) க்கு முந்தினவளாயிருந்தும், அவளுடைய பெயர் அவ்வளவு விசேஷமாய்த் துலங்கியதில்லை. அவள் அந்தவேலையை எடுத்துக்கொள்ளும்படி தூண்டப்பட்ட விதமானது, ஸ்திரீகளுடைய யதார்த்த சித்தத்தினுக்கும் சுயமான தைரியத்திற்கும் நிதர்சனமாகப் பலிக்கின்றது.

சாரா மார்ட்டின் (Sara Martin) என்பவளின் தாய்தந்தையர்கள் மிகவும் ஏழைகள், அவளுடைய சிறுவயதிலேயே பெற்றோரை இழந்துவிட்டனள், (Yarmouth) யார்மௌத்துக்குச் சமீபமான கெயிஸ்டர் (Caistar) ஊரில் அவளுடைய பாட்டியாரால் வளர்க்கப்பட்டாள். அவள் வீடுவீடாய்ப்போய் உடைதைத்துக் கொடுத்து நாள் ஒன்றுக்கு எட்டு அணு விதம் தன் காலக்ஷேபத்திற்கு வழி தேடினள். 1819-ம் வருஷத்தில் ஒரு ஸ்திரீயானவள் தன் குழந்தையைக்குரூரமாய் அடித்துத் தகாவண்ணம் நடத்தினதற்காக விசாரணை செய்யப்பட்டு யார்மௌத் (Yarmouth) சிறைச்சாலையிற் காவற்படுத்தப் பட்டாள். அவளுடைய குற்றமானது அந்தப்பட்டண முழுவதும் பேச்சாய்க் கிடந்தது. இந்த இளவயதுள்ள தையற்காரியானவள் அந்த விசாரணை சமாசாரத்தால் மனசில் மிகவும் வருத்தங்கொண்டு சிறைச்சாலையில் அவளைப்போய்ப் பார்த்து மீட்

பதற்கு முயற்சிக்க விருப்பங் கொண்டனள். இதற்கு முன் அந்தச் சிறைச்சாலையின் சுவர் அருகிலே போகும்போதும் அதனுள்ளிருப்பவர்களைப் பார்த்து, அவர்களுக்கு வேதப்புத்தகங்களை வாசித்து, அவர்கள் துன்மார்க்கமாய் நடந்துகொண்ட ஜனங்களிடத்தில் அவர்களைத் திரும்பச் சேர்க்க எண்ணங்கொண்டு, பலமுறை அதற்குள் பிரவேசிக்க அவாவுடையவளாயிருந்தாள்.

கடைசியிற் சிறைப்பட்டுள்ள அந்தத்தாயைப்போய்ப்பார்க்கும் அவாவை அடக்க முடியவில்லை. அந்தச் சிறைச்சாலை வாயிலை அடைந்து தட்டுகருவியை உயர்த்தி, சிறைச்சாலையின் அதிபதியிடம் தன்னை உள்ளே விடவேணுமென்று கேட்டுக்கொண்டனள். ஏதோ சில முகாந்தரத்தால் அவளுக்கு உத்திரவு கிடைக்கவில்லை. ஆனால் அவள் திரும்பித், திரும்பவும் வந்து கேட்டுக்கொண்டனள். இம்முறை, அவள் உள்ளே விடப்பட்டனள். அந்தக்குற்றவாளியாகிய தாயானவள் உடனே அவள் முன்புவந்து நின்றனள். ஸாராமார்ட்டின் (Sarah Martin) தான்வந்த கருத்தைச்சொன்ன பொழுது, அந்தக்குற்றவாளி கண்ணீர்வடித்து அவளுக்கு வந்தனம் செய்தனள். அந்தக்கண்ணீரும் வந்தனமும்,சாரா மார்ட்டின்(Sarah martin) உடையபிந்திய வாழ்நாள் முழுவதிலும் உள்ள நடப்பினுக்குக் காரணமாயிருந்தன. அந்த ஏழையான தையல்வேலைக்காரியான தையல்,தையல் வேலையால் ஜீவனம் செய்துகொண்டு தன்னுடைய விட்டாற்றி நேரங்களைச் சிறையாளிகளைப் போய்ப்பார்ப்பதிலும், அவர்களுடைய துன்பத்தைத் தணிப்பதிலும்,செலவிட்டு வந்தனள். அந்தக்காலத்தில் அவர்களுக்கு உபதேசியாவது,உபாத்தியாயியாவது இன்மையால் அவள்தானே அவர்களுக்கு வேதப்புத்தகத்தை வாசித்தும், எழுதவாசிக்கக்கற்பித்தும் தன்னை இரண்டு வேலைக்கும் உரியவளாயாக்கிக் கொண்டனள். அவள்கூறிய வண்ணம் கடவுளினுடைய ஆசீர்வாதம் தன் மீதுதங்கி யிருப்பதாக உணர்ந்து, ஞாயிற்றுக்கிழமையும், மற்றும் விட்டாற்றி நேரமும் தவிர இதே காரியத்திற்காக ஒருவாரத்தில் ஒருநாள் முழுமையும் செல விட்டனள். அவள் அந்த ஸ்திரீகளுக்கு, இணைக்கவும், தைக்கவும், வெட்டவும் கற்பித்தனள். அந்தச் சாமான்களை விற்றுவந்த பணமானது, மற்றச்சாமான்களைவாங்கவும், இவ்விதமாய்த் தொடங்கப்

பட்ட கைத்தொழில் அப்பியாசத்தை நடத்தவும், அவளுக்குத்தகுதியுண்டாக்கிற்று. புருஷர்களைச் சோம்பேறித் தனத்தினின்று தடுப்பதற்கும், தாங்களே நினைந்து நினைந்து நாசமடையாமைக்கும், வைக்கோல் தொப்பிகள், சிறுவர் பெரியவர்களுக்கு இசைந்த குல்லாக்கள், வெண்பஞ்சு உட்சட்டைகள், துண்டுத் தையல்களாகிய ஏதாவது ஒன்றைச் செய்யும்படி கற்பித்தனள். இவ்வாறு அச்சிறையாளிகளின் சம்பாத்தியத்திலிருந்து ஒருதொகை உண்டுபண்ணி, அதனை அவர்கள் விடுதலையின்பேரில், அவர்களுக்கு வேலை உண்டாக்கிக் கொடுப்பதிற் பிரயோகித்தனள். இவ்வாறுதிரும்ப உலகத்தில் அவர்களுடைய முயற்சியை யோக்கியமாய்த் தொடங்கும்படி திறமைப்படுத்தி, அவள் சொல்லுகிறபடி அவர்களுடைய நன்னடத்தையைக் காணும்படியானலாபத்தைத் தனக்கு உண்டாக்கிக்கொண்டனள்.

இந்தச்சிறைச்சாலையின் வேலை விஷயத்திலேயே விசேஷமாய்க் க்வனிப்பதால், சாரா மார்ட்டின், (Sara martin) உடைய உடைதைக்கும் வேலையானது, குறைபட்டது. மறுபடியும் அந்த வேலையைத் தொடர்வதற்குச் சிறைச்சாலை வேலையை நிறுத்தும்படிக்கிருந்ததோ என்னும் சங்கை உண்டாயது. ஆனால் அவளுடைய தீர்மானமானது முன்னரே உண்டாயிருந்தது. "நான் செலவைக் கணக்குப் பார்த்திருந்தேன். என்மனதில் துணிவு உண்டாய் விட்டது. பிறருக்கு உண்மையைப் போதிக்கும் காலத்தில், தற்கால வறுமை எனக்கு உண்டானால், ஓர் ஆளுக்கு உண்டாகும் சொற்ப நேரத்துக் கஷ்டமானது, இவ்வாறு மற்றவர்களுக்கு உபகாரப் படுவதாகிய, ஈசுவரனைப் பின்பற்றும் பயனுக்கு நிகராகாது" என்று அவள் சொன்னாள். அவள் இப்பொழுது மற்றப்படி சஞ்சலமான சோம்பலுக்கு இடமாயுள்ளதை ஒழுங்கான சுறுசுறுப்புள்ள இன்பஸ்தானமாக மாற்றிக்கொண்டு, அந்தச் சிறையாளிகளிடம், தினமும் ஆறு, ஏழுமணிநேரம் செலவிட்டு வந்தனள். புதிதாய் வந்த சிறையாளிகள் சிலகாலம் அடக்கமுடியாதவர்களாயிருந்தனர். ஆனால், அவளுடைய மாறாத சாந்தகுணத்தால் அவர்கள் தன்னை மரியாதைசெய்து தன்னுடன் வேலைசெய்யும்படி ஆக்கிக்கொண்டனள். வயசிலும் குற்றத்திலும் முதிர்ந்தவர்களும், தேர்ந்த லண்டன்

தேசத்து மூடிச்சுமாறிகளும் கெட்டொழிந்த பையன்களும், ஒழுக்கற்ற மாதுமிகளும் வியபசார ஸ்திரீகளும், கள்ளச்சரக்குக் கொண்டு போவோரும், ஆடுமாடு திருடுவோரும் கப்பற்றுறைமுகமாயும்பட்டினமாயுமுள்ள ஸ்தலத்தின்சிறைச்சாலையில் வழக்கமாய் நிறையக்கூடிய சகலவிதமான குற்றவாளிகளின் கூட்டமும், எல்லாரும் இந்த நற்குணமுள்ள ஸ்திரீயின் வசவிருத்திக்குட்பட்டனர். அவர்களுடைய ஆயுளில் முதன் முதல் இறகுபிடிக்கவாவது, நெடுங்கணக்கின் எழுத்துக்களைக் கற்கவாவது முயற்சிப்பதை அவள் கண்ணுற்பார்க்கக்கூடிய தாயிருந்தது. அவள் அவர்கள் எல்லோரையும் முறைப்படிகாத்து, அவர்களுக்காக அழுது ஜெபம் செய்து, வருத்தப்பட்டு அவர்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாயினள். அவர்களுடைய நன்மையான தீர்மானங்களை ஸ்திரப்படுத்தியும், நம்பிக்கையற்றுக் கைவிட்டவர்களை உற்சாகப்படுத்தியும், அனைவரையும் சீர்திருத்தத்திற்கான நன்மார்க்கத்தில் வைத்து நிலைநிறுத்தவும் முயற்சித்தனள்.

இந்த நற்குணமும் உண்மை எண்ணமும் வாய்ந்த ஸ்திரீயானவள் தைரியப்படுத்த ஒருவருமின்றி, விசேஷ உதவியுமின்றித் தன்னுடைய மேன்மையான ஒழுக்கத்தை இருபதுவருஷங்களுக்கு அதிகமாக நடத்திவந்தனள். அவளுடைய ஜீவனும்சமெல்லாங்கூடி அவளுடைய பாட்டியாரால் வைத்துப்போன பத்து அல்லது பன்னிரண்டுபவுன் வருஷவரும்படியும், உடுப்புத்தைப்பதில் உண்டாகும் சொற்ப சம்பாத்தியமுமேயாம். அவள் உதவிசெய்துவந்தகாலத்தின் கடைசி இரண்டுவருஷங்களில் யார்மௌத் (Yarmouth) இன் மாஜிஸ்டிரேட்டு அதிகாரிகள் அவள்தானே எடுத்துக்கொண்ட உழைப்பினால், அவர்கள் நியமிக்கக் கடமைப்பட்டிருந்த உபாத்திமார், உபதேசிகளின் செலவானது மீதப்பட்டதென்பதையறிந்து வருஷத்திற்குப் பன்னிரண்டுபவுன் வேதனம் அவளுக்குக்கொடுக்க விரும்பினார்கள். ஆனால் அவர்கள் கேட்டுக்கொண்ட முரட்டுத்தன்மையான மாதிரியானது அவளுடைய ரோஷம்பொருந்திய உணர்ச்சிக்கு மிகவும் வருத்தத்தை உண்டாக்கிற்று. அவள் சம்பளம் வாங்கும் வேலைக்காரியாயிருக்கவும், என்றும் அன்பினாற்செய்து

வந்த ஊழியங்களுக்குப் பிரதியாகப்பணம் வாங்கவும் இஷ்டமற்றிருந்தனள். ஆனால் சிறைச்சாலையின் அதிகாரிகள் தாங்கள் அவளை சிறைச்சாலைக்குள் விடவேணுமானால் அவள் அவர்களுடைய நிபந்தனைக்குட்படவேண்டும்—அல்லது உள்ளே வரக்கூடாதென்று இனிமையின்றி அவளுக்குத்தெரிவித்தனர். ஆதலால் இரண்டுவருஷம் அந்தச்சிறைச்சாலை அதிகாரிகளின் அனுமதிப்படி சிறைச்சாலையின் உபதேசிவேலைக்கும், உபாத்தியாயவேலைக்குமாக, வருஷத்திற்குப்பன்னிரண்டுபவுன் சம்பளம் வாங்குவாளாயினள். ஆயினும் இக்காலத்தில் வயதுமுதிர்ந்து தளர்ந்தவளானாள். அந்தச்சிறைச்சாலையின் அசௌக்கியமான ஆகாயமானது கடைசியில் அவளைப்பலஹீனப்படுத்துவதற்கு விசேஷ கருவியாக இருந்தது. அவள் தன்மரணப்படுக்கையிலிருந்தபொழுது, முற்காலத்தில் தன் வீட்டாற்றிநேரங்களில் ஊடே ஊடே பழகிவந்த பரிசுத்த கவிகள் உண்டாக்கும்படியான கவனசக்தியைத் திரும்பப் பழக்கத்தொடங்கினள். வித்தியா சாமர்த்தியவிஷயமாய்க் கவனித்தால் அந்தக்கவிகள் ஆச்சரியப்படத்தக்கனவல்ல. ஆகிலும், அவ்வளவு உண்மையான தன்மையுடனும், கிறிஸ்தவர்களுக்குள்ள நேசத்துடனும் செய்யப்பட்ட செய்யுட்கள் என்றும் காணப்படவில்லை. அவள் உண்டாக்கிய கவிகளைப்பார்க்கிலும், அவளுடைய சொந்த ஒழுக்கமே மிக மேன்மையான கவியாயிருந்தது. உண்மையான தைரியமும், விடாமுயற்சியும், தர்மமும், ஞானமும், நிறைந்திருந்தது. அவளுடைய ஒழுக்கம் உள்ளபடியே அவளுடைய சொந்தவாக்கியமாகிய "மற்றவர்களும் கடவுள் அனுக்கிரகத்தைப்பெறவேண்டுமென்பதில் விசேஷ விருப்பங்கொள்ளுதலானது தெய்வத்தன்மையை விளக்குகின்றது" என்னும் கவிக்கு அவளுடைய நடையானது வியாக்கியானமாயிற்று.

ஐந்தாவது அதிகாரம் முற்றும்.

---

ஸ்ரீ:

# மும்மூர்த்திகள்.

காட்சி பெறு மிவ்வுலகம் தோன்றி நிலைநின்று பின்பு அழிதலையுடையது. வேறு அண்டங்களு மிப்படியே நடைபெறும். மரம் செடி கொடிகளும் மிருகங்களும் பறவைகளும் மற்றைய உயிர்ப் பிராணிகளும் மானிடர்களும் அப்படியே யாவதை நாம் தினந்தோறும் காண்கின்றோம். தோன்றுதலே சிருஷ்டி. நிலைநிற்பதே திதி. அழிதலே சங்காரம். இம்மூன்று தொழில்களுக்கும் மூன்று மூர்த்திகளே காரண பூதர். அவர்கள் பிரமன், திருமால், ருத்திரர்களாவர்.

2. உலகத்தோற்றத்திற்கு முதற்காரணமாயுள்ளது பிரகிருதியாதலால் அதனை மூலப்பிரகிருதியென்று வழங்குகின்றார்கள். மாயை யென்றும் அவியத்தமென்றும் வேறிரண்டு பெயர்களாலும் அதை வழங்கி வருகின்றார்கள். நம்மைச் சூழ்ந்து எவ்விடத்தும் பொருள்கள் காணப்படுகின்றன. அவைகள் நமது புலன்களைக் கவருகின்றன. இருள் ஒளி சத்தம் நிறம் இவைகளும் வேறுபல வடிவமான பொருள்களும் இக்கவர்ச்சியால் அடிக்கடி நமது மனதில் தோற்றுகின்றன. சீதம் உஷ்ணம் பசி தாகம் வருத்தம் சுகம் இவைகளைப் புலன்கள் நமக்கு அறிவிக்கின்றன. இவ்வுணர்ச்சிகளையும் அநுபவங்களையுமே சுபாவம் அல்லது பிரகிருதியென்று நாம் வழங்கி வருகின்றோம். நம்மை யுணரும்படி செய்விக்கும் அறிவோடுகூடிய தத்துவத்தைத்தான் நாம் ஆன்மாவென்கின்றோம். பிரகிருதி பரிணாமத்தாலாய பொருட் கூட்டங்களெல்லாம் இடைவிடாமல் மாறிக்கொண்டே யிருக்கின்றன. ஒருநிலையிலுள்ள பொருள் மற்றொரு நிலையுள்ளதாக மாறிக்கொண்டே யிருக்கின்றது. இம்மாறுதல்கள் ஒன்றின்பின்னொன்றாய் ஓய்வின்றித் தொடர்ந்து கொண்டே யிருக்கின்றன. இன்று அலை நுரைகளோடு கொந்தளிக்கும் கடலுள்ள இடம் காலஞ் சென்றால் சகிக்கமுடியாத சூடுள்ள மணற்காடாக மாறிவிடும். மணிமாட கோபுரங்களோடு இப்பொழுது விளங்கும் நகரம் நடுக்கடலில் கொந்தளிப்பில்லாத சாந்த சமுத்

திரமாக மாறிவிடும். மேடுகள் பள்ளமாய்விடும். பள்ளங் மேடுகள் ளாய்விடும். சந்திர சூரிய மண்டலங்களழிந்த பின் நக்ஷத்திர வீதிகளும் அழிந்துபோம். இடைவெளியான ஆகாயமொன்றே யிருந்து நிற்கும். இவ்வாறாகப் பிரகிருதியின் இலக்கணம் மாறி நிற்பதேயாம். இம்மாறுதல்கள் புரிவோர் மும்மூர்த்திகளே. இம்மாறுதல்களுக்கிடையே தாமொரு மாறுதலுமின்றி நிற்பதெதுவோ அதுதான் ஆன்மா. இது பிரகிருதியின் சத்தேயாம். அது உள்ளிலும் வெளியிலும் தூரவும் கிட்டவும் காணப்படாததாயும் காணப்படுவதாயும் சூரியனிடத்தும் புறத்தும் விளங்கும். இப்படிச் சத்தாயுள்ள ஆன்மவஸ்துவையே மாறுதலடையாத சுடுநிலைச் சத்தியென நாம் அறிகின்றோம்.

3. நமது உடலேஓர் தேர். தேரில் நாயகன் ஆன்மா. தேரை நடத்துவோன் புத்தி. தேரிற் பூட்டிய குதிரைகள் நமது புலன்கள். குதிரைகளின் கடிவாளங்களே மனதின் சங்கற்ப விகற்பங்கள். இக்குதிரைகள் போகத்திற்குரிய பொருள்களை நாடி ஓடுகின்றன. அண்டபிண்ட நியாயம் வருமாறு:—கோழிமுட்டையின் மத்தியிலுள்ள மஞ்சட்கரு அடுத்துள்ள வெள்ளைக்கருவைப் பார்க்கிலும் திடமுள்ளது. அதற்கு வெளியே வெண்மையான ஓடொன்றுளது. இதுபோல இவ்வுலக அண்டத்தின் மத்தியிலுள்ள சூரியன் நெருக்கமாயமைந்துள்ள ஒளியம்சமான மஞ்சட் கருவாகின்றது. இதைச் சுற்றி ஆகாயவடிவமான திரவக்கடலிருக்கின்றது. இதுவே வெள்ளைக்கரு. இதற்கு வெளியில் ஆழிபோல் வட்டமாயிருப்பது வெளுப்பான அணுக்கூட்டம். இதுவே முட்டையின் ஓடுபோன்றது.

4. இவ்வுலக சம்பந்தமான அறிவோடுகூடிய சத்தியைத்தான் நாம் பல பெயரிட்டு வழங்குகின்றோம். இவ்வுலக அண்டத்தின் நடுவிலிருக்கும் அறிவுப் பொருளையே நாம் மகத்தத்துவம் என்கின்றோம். சைதன்னியவஸ்துவின் அறிவால் விளங்கும் முதல்தோன்றிய வடிவம் இம்மகத் தத்துவந்தான். இது சாங்கியர்களின் 24-தத்துவங்களில் ஒன்றும். இவ்வறிவுப் பொருளான சைதன்னிய வஸ்துவைத்தான் பிர்மா, விஷ்ணு, ருத்திரன் என்று வழங்குகின்றோம்.

சிருஷ்டித் தொழில் புரிவது ஒரு சத்தி. இது அறிவுள்ளது. இச் சத்தி மத்தியிலிருந்து வெளியே பரவச்செய்யுஞ் சத்தியாம். இச் சத்தி யறிவோடுகூடியதென்பது நமது நாட்டு வழக்கு. மேற்குப் புலவாராய்ச்சியார் இச்சத்திக் கறிவில்லை யென்பர். பிரளயத்தை யுண்டுபண்ணும் சத்தி ருத்திரனும். ஒடுங்கும்படி செய்வதும் விரியும்படி செய்வதும் மத்திய சத்தியாம். இச்சத்தி விஷ்ணுவாம். இவர் சிருஷ்டியையும் சங்காரத்தையும் மீறவிடாது காக்கும் சத்தியாம். மகத்தத்துவத்தின் மூன்று பிரிவாய மும்மூர்த்திகளும் அறிவுடையவரேயாம். மத்திய சத்தி யின்றேல் படைப்பில்லை. படைப்புச் சத்தியின்றேல் சங்காரமில்லை. சங்கார சத்தியின்றேல் திதியில்லை. இவ்வாறாக ஒன்றையொன்று தொடர்ந்தே நிற்பதால் ஒவ்வொரு மூர்த்தியும் தனித்தனியே முக்கியராம். தோற்றுவிப்பானில்லையேல் இரட்சிப்புத் தொழில் இல்லையாம். இரட்சிப்பானில்லையேல் சங்கரிப்புத் தொழில் வேண்டாவாம். திருமாலுந்தி பூத்தவன் பிரமனாதலின் திருமாலை மத்திய சத்தியெனப்பட்டது. தோற்ற ஒடுக்கங்களைக் காப்பதும் தோற்றிய பொருள்களைக் காப்பதுமே திதியாகும்.

5. இதற்கொரு திருட்டாந்தம் வருமாறு:—காற்றும் அலையுமில்லாத போழ்து ஓர் நீர்நிறைந்த குளத்தில் ஒரு சிறுகல்லை நாம் எறிந்தால் அந்நீர் மத்தியில் சிறு பள்ளந்தோன்றி அதைச் சுற்றிலும் உடனே வட்டவடிவமான நீரலைகள் நடுவிலிருந்து வெளியிற் பரவியோடுவதைக் காணலாம். அவ்வட்ட அலைகள் கொஞ்சதூரம் சென்றபின் உள்ளே குவிந்தடங்குவதையுங் காணலாம். இதனால் வெளியில் விரியுஞ் சத்தி, உள்ளேயொடுங்குஞ் சத்தி, இவ்விரண்டு சத்திகளுக்கும் காரணமாய மத்தியசத்தி என்னு மூன்று சத்திகளைக் காணலாம். இம்மூன்று சத்திகளும் குறிப்பான நோக்கத்துடன் கன்ம பரிபாக நியதியின்படி உலகங்களையும் ஜீவவர்க்கங்களையும் படைத்துக் காத்து அழிக்கின்றன வென்பது நமது தத்துவ சாஸ்திரிகள் கொள்கை.

6. இச்சத்திகள் வட்டவடிவமாய் இயங்குவதை மேற்குப் புலத்தத்துவ ஆராய்ச்சியார் இப்பொழுது கண்டுபிடித்தார்கள். இது

நமது நாட்டில் பிரணவநாதம் சோதி வகைகளால் நம் முன்னோர்
கண்டுணர்ந்த புராதன மார்க்கம். ஒரு துளி ஜலத்திலுள்ள சிறு
அணுவின் அசைவு, சூரியன் முதலிய கிரகங்களின் அசைவு, காற்
றின் அசைவு, கடல் நீரின் அசைவு, மின்சார அசைவு இவைகளெ
ல்லாம் வட்டவடிவமாகவே உள்ளன. இம்மூன்று சத்தி வடிவமான
மூர்த்தங்கள்பிரதிஷ்டை செய்யப்பெற்ற தலங்கள் நமது நாட்டில்
வடக்கிலுந் தெற்கிலுமாக இரண்டுள்ளன. மற்றைய தலங்களில்
திதி சங்கார மூர்த்திகளின் பிம்பங்கள் ஒரே ஆலயங்களிலோ வெவ்
வேறாலயங்களிலோ சைவ வைணவ ஆகமங்களின் விதிப்படி பிரதி
ட்டை செய்யப்பெற்று வணங்கப்பட்டுவருகின்றன. கலிக்கொடுமை
யால் இம்மூர்த்திகளின் சாந்நித்திய சத்திகளையும் வழிபாட்டின் சீரை
யும் பகுத்துணருந் திறமில்லார், புராதனமாகிய ஆலயங்களில் விளங்
கும் மூர்த்திகளின் சாந்நித்தியசத்திகள் கெடும்படி மதச்செருக்கால்
இவ்விருமூர்த்திகளில் ஒரு மூர்த்தியினிடம் அபிமானம் வைத்து மற்
றைய மூர்த்தியை மறைத்து வைக்கவோ, வேறிடம் பெயர்த்து வை
க்கவோ முயன்று வழக்குந் தொடரலானார்கள். பூஜாவிதிகளை வழு
வாது நடாத்தி மூர்த்திகளின் சத்தியைப் பரிபாலிப்பதை மறந்து சில
வைக் கற்களால் கட்டடத்தைச் சீர்ப்படுத்திப் பலவழிகளையு முண்
டாக்கிச் சாளரங்களையும் வைக்கின்றார்கள். அதிகக் காற்றுக்கு இட
முண்டாயின் மூர்த்தி பாவனையில் மனம் நிலைக்காது. புராதன ஆல
யங்களின் ஜீர்ணோத்தாரணமென்பது பழைய கட்டிடங்களைப் புராத
ன நிலையை மாற்றாது புதுப்பிப்பதாம். புதுப்பிப்போர் நோக்கத்தின்
படி கட்டிடத்தின் நிலையையும் மூர்த்திகளின் நிலையிடங்களையும் மாற்
றுவதல்லவாம். செல்வமிகுதியா லறிவுகெடுமென்பதைக் கருதியே
குறளில் திருவள்ளுவர் "திருவேறு தெள்ளியராதலும் வேறென்று"
விளக்கியிருக்கின்றனர். ஆலயங்களைப் பெருந்தொகை செலவிட்டுப்
புதுப்பிப்போர் மூன்று மூர்த்திகளின் மேன்மையை நன்குணர்ந்து
மதப்பேய்க்கிடங் கொடாமல் அம்மூர்த்திகளின் சாந்நித்தியம் அதா
வது சத்திபரிபாலனத்திற் கின்றியமையாத நித்திய நைமித்திக பூ
ஜைகளையும் திருவிழாக்களையும் முன்னோர் வகுத்துள்ள ஆகமவிதிப்
படி பரிபாலிக்க வகைசெய்வாரேல் அவர்களின் குடும்பம் வாழை
யடி வாழையாய்ப் பெருகிச் செழிப்படைவதுடன் நாடுஞ்செழிக்

கும். இம்மார்க்கம் சைவ வைணவரிருதிறத்தாரும் அநுட்டிக்கத் தக்கதாம்.

7. மூர்த்தி யுபாசனையில் முதன்முதலில் இழிவார்க்குப் பத்தி நெறிப்பழக்கம் திடப்பட முன்னோர்கள் இம்மூர்த்திகளை ஓரிடத்து யர்த்தியும் ஓரிடத்துத் தாழ்த்தியும் நூல்களிற் கூறியுள்ளார். பத்தி வழிதிடப்படின், சமரசம் தானாகவே உதிக்குமென்பது அவர்கள் உட்கருத்து. திருக்குறுங்குடி, சிதம்பரம், திருவரங்கம், மதுரை, அழகர்கோயில் இத்தலங்களின் மூர்த்திகளின் வழிபாடு திருவிழா முதலிய நயங்களைப் பகுத்துணர்வார்க்கு நாமிங்கு எடுத்துக் காட்டியது இனிதுவிளங்கும். சைவம் வைணவம் என்னு மிரண்டு மார்க்கவழிபாடுகளும் கன்ம பூமியிலுள்ள மாந்தர்களுக்கு இரு கண்கள்போல் நின்று உட்கண்களையும் மெய்யறிவையும் அடைவிக்கும் தொன்மை நெறிகளாம். கலிக்கொடுமையால் இவ்வழிகளை யழிக்கக் கொடுவழிகள் தோன்றுகின்றன. பழைய நெறிகளின் சத்தை யழிய விடாது காத்துப் புதியனகூட்டுதல் நலமாம்.

அறுசீராசிரியம்.

மகத்தாகுந் தத்துவமே மூன்றுவிதச்
சத்திகளாய் மருவி நின்றே
சகத்தாதி படைத்தளித்தே யழிப்பதுள
மூர்த்திவிதஞ் சாற்றில் மூன்றும்
மிகத்தாமு மறிவுகொடே நியதியொடு
தொழில்புரிவர் மேலை நாளின்
மகத்தானோர் வழிப்படியே போற்றிடினே
மகிதலத்தில் வாழ்வுண் டாமே.

இங்ஙனம்,

தி. வேங்கடராம ஐயங்கார்.

# ஆத்ம விசாரவணை.

[ஸ்ரீமத்-சோஸப்டையாஸ் அவர்கள் எழுதியது.]

(முற்றொடர்ச்சி.)

அநேக முத்திப் பேறுபெற்றவர்களும், போப்பென்னுஞ்சிரேஷ்ட மகா குருக்களும், பேர்போன வம்மிசபதிகளும், முடிபொறுத்த அரசர்களும், வீண் மகிமையாகிற சோதனையைச் செயிப்பதற்காகத் தாங்கள் நீசமனுஷரென்று இடைவிடாமல் நினைத்துக்கொண்டு வந்ததுமன்றி, "நீங்கள் மனிதர்கள் இதை மறவாதேயுங்க"ளென்று நேரத்துக்கு நேரம் அவர்களுக்கு நினைப்பூட்டுவதற்காகத் தங்களோடு ஒருவனை யெப்போதும் வைத்திருப்பார்கள்"

அர்ச் பிராஞ்சீஸ் குபோர் சியா (St Francis, Borgia) இல்லறத்திலிருக்கும் போது ஓர் மகாத்மா அவருக்குச் சொன்னதாவது:— "தேவ ஊழியத்தில் நீர் வர்த்திக்க வேண்டுமென்றால் உம்மை நீர்தானே நிந்தித்து உமதுபேரில் வெட்கிக்கூசுவதற்கான யாதொருகாரியத்தின் பேரில் தினந்தோறும் யோசனைபண்ணுமலொருநாளும் விடப்படா" தென்றார். இந்தச்சிட்டர் இந்தப்புத்தியை மிகுந்த ஆவலோடநுசரித்துக்கொண்டு வந்ததினால் மனோதியானம் பண்ணினபின் தம்மையறிந்து நிந்தித்துத் தாம் கேட்டது, வாசித்தது, பார்த்ததெல்லா வற்றையும், தமக்கவமானமாக்கிக் கொள்ளுவதற்காகத்தினந்தோறும் இரண்டுமணி.நேரம் செலவழியாமற் போகமாட்டார். இதுவுமன்றி வேறொருபத்திமுயற்சியும் செய்துகொண்டுவருவார். அஃதென்னவெனில்:—காலையில் எழுந்திருந்தவுடனே, "நான் மண்ணுந் தூசியுமாய்ப்போவேன்" என்கிற சத்தியம் அன்றைக்கு முழுதும் தம்மனதிலே பதிந்திருக்கும் பொருட்டு முந்தமுந்த முழங்காலிலிருந்து மும்முறை பூமியை முத்தஞ் செய்வார். இதற் கொத்த பத்தி முயற்சிகளைக்கொண்டு, அவரடைந்தபலன் எவ்வளவென்பது, அவரிடத்தில் விளங்கின தாழ்ச்சியும், அர்ச்சிய சிஷ்டத்தன்மையையும் நோக்கின் வெளிப்படும். இந்தப்புத்தியை நாமும் அநுசரிக்கக் கடவோம். நம்மை நாமே நிந்திப்பதற்குரிய யாதோர்காரியத்தின்

பேரில் தினந்தோறுங் கொஞ்சமாகிலும் யோசியாமலிருக்கப்படாது. நமதுபேரில் தாழ்மையான எண்ணம் நமதான்மாவிலே ஸ்திரமாய்ப்பதிந்து, நமது பலவீனத்தையும் நிர்ப்பாக்கியத்தையும் இடைவிடாமல் நினைத்து நமது பேரில் முழுவெட்கமும், கூச்சமும், நமதிருதயத்தில் தோற்றும் வரைக்கும் இந்த முயற்சியை விடாது செய்துவரல் வேண்டும். இந்த முயற்சி செய்வது நமக்கு மிகவும் அவசியம். ஏனென்றால், மற்றவர்கள் நம்மைக் கனமாயெண்ணவேண்டுமென்கிற அகங்காரம் நம்மிடத்தில் சுபாவமாய் நிறைந்திருக்கும். ஆகையால் நமது பலவீனத்தை யுற்றுவிசாரித்து இடைவிடாமல் நம்மை நாமே தாழ்த்திக் கொள்ளாவிட்டால், தண்ணீரில் எப்போதும் அமிழ்ந்து கொண்டிராத கெட்டித்தட்டை க்ஷணத்துக்கு க்ஷணம் தண்ணீருக்கு மேலே மிதக்கிறதுபோல நாமும் எப்போதும் மமதையால் எழுந்து கெட்டுப் போவோமென்பது தப்பாது. ஆகையால் நமது பேரில் நாம் சுபாவமாய்க் கொண்டிருக்கிற மேலான வெண்ணத்தினால் நமது இதயத்தில் ஓயாமல் உயர்ந்தெழுகிற அகங்காரத்தை யெப்போதும் அடக்கி நம்மைத் தாழ்த்திக்கொள்ளப் பன்முறை பயிலல் வேண்டும். மயில் அழகில்லாத தன் காலைப்பார்ப்பதுபோல நாமும் நமது பலவீனத்தையும் குற்றங் குறைகளையும் யோசித்துப்பார்த்து அகந்தையால் நம்மிலுண்டாகிற வீண்மகிமையை அடக்க அநுதினம் வருந்துவோமாக.

இறுதியில், மேற்கூறிப்போந்த எம்மனுபவத்திற் கெட்டிய நிதர்சனங்களையும், பிறசான்றோர் கூறும் போதசாதனங்களையும், நிதானித்து உய்த்துணர்ந்து நீர்க்குமிழிபோல் நிலையற்ற வாழ்க்கையும், யாக்கையும் நில்லாமைகருதி, நித்தியனடி நித்தமும் போற்றி நெறி நிலை நின்று மறவழியொருவித் தவத்தினைப்புரிந்து அறத்தினை முயல்வோம்.

"ஒல்லும் வகையா லறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்"
"அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை"

(திருக்குறள்.)

# புராதன இந்தியா.

[பங்களூர் ஸ்ரீமத் - S. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள் M. A. எழுதியது.]

(முற்றொடர்ச்சி.)

அரசுகளோவெனின், மேற்கிருந்துதொடங்கி துவாரகையை அரசவீடாகக்கொண்டு இக்காலத்துச் சிந்து கூர்ஜரதேசமுள்ளடங்கிய காம்போஜமும், ஷரதேரியென்னும் பாழிடத்தினின்று தக்ஷசிலாவென்னும் இராஜதானிபெற்று, கீழ் ஆப்கானஸ்தானத்துடன் ஸிந்துக் கீழ்கரையிற் சிறிதுதூரம்வரை பரவிய காந்தாரமும், போதனி அல்லது போதணவென்னும் பெயர்பெற்ற ராஜதானிபெற்று கோதாவரிக்கரையிலோ, காஷ்மீரத்து மேல்முனையிலோ நின்ற அப்ஸாரகதேசமும், வடமதுரைராஜதானிபெற்ற சூரசேனதேசமும், சதத்ரு (Satlej) வின் இக்கரை நாடுகள் என்று தற்காலம் எடுத்தாளப்பட்ட யமுனைக்கு மேல்பாலான மச்சதேசமும், கன்னோக்குச்சி, காம்பிலியமென்னு மிரண்டு ராஜதானிகள் பெற்ற இரண்டு பாஞ்சாலங்களும், டெல்லிக்குச்சுற்றிலுங் குடிவாய்ந்த குரு அல்லது கௌரவதேசமும், கோசாம்பிராஜதானிபெற்ற வச்சம் அல்லது வம்சதேசமும், தற்காலத்திய பண்டல்கண்டில் ஒருகூறும், நேபாளத்தில் மற்றொரு கூறும்பெற்ற சேதிதேசமும், நேபாளத்தாழ்வரையில் குசிநகரத்தைச்சுற்றிலுமுள்ள மல்லதேசமும், வைசாலியலிச்சவிகளும், மைதிலீய விதேயர்களும் முதன்மைபெற்றுவிளங்கிய எண்கூறுவாய்ந்த வஜ்ஜயப்பெருங்குழுவும், நேபாளத்தியச்ராவாஸ்தியை யொருமுனையிலும், காசியை மற்றொருமுனையிலும் பெற்று ஸாகேதமென்னும் நகரம் நடுப்பட்ட கோஸலதேசமும், காசியைச்சுற்றிக்கிடந்த காசிதேசமும், கங்கைக்கரையினின்ற பாகல்பூர்வரை பரந்த பாடலீபுரராஜதானியை (Patna) யுட்கொள்ளும் மகததேயமும், பாகல்பூருக்கு அண்மைத்தாய்ச் சம்பாநகரத்தை ராஜதானியாகப்பெற்ற அங்கதேயமுமாய பதினாறுமேயாம்.

மேற்கூறிய பாகுபாட்டினின்றும் ஆரியர்கள் கோதாவரி வரைக்குமே தென்புறம் பரவினரென்று நன்கு விளங்கும். ராமா

யணத்தில் அமைந்துகிடக்கும் விஷயங்களுக்கு இத்தகைய கொள்கை சற்றும் முரண்படாது. ஏனெனில் ராமாயணத்தில் ஓரிடத்திலும் கோதாவரிமேல்பாதையில் நிலைபெற்ற ஜனஸ்தானத்துக்குத்தென்பால் ஆரியவரசேயாவது ஆரியக்குடியேற்றமாவது பிரஸ்தாபிக்கப்படவேயில்லை. இக்காலத்து ராஜதந்திரவிசேஷம், அடுத்துள்ள நாடாட்சிபெற்ற கோஸலத்திற்கும் மகதத்திற்கும் விளைந்த அதிராஜ்யப்போர்களேயாம். சிசுநாக வம்சத்தவர்களில் பிம்பஸாரனும், அஜாதசத்துருவும் கோஸலத்தையடக்கி வைசாலியலிச்சவியர்களையாட்படுத்தி வெற்றிபெற்று மகததேயத்தை விரிவுபெறச்செய்தார்கள். இவர்கள்தாம், ராஜகிரகத்தை அரண்பெறச்செய்து மகத ராஜதானியை விசாலித்து ஆணைசெலுத்தினர்கள். அஜாதசத்துருவுக்குச் சில தலைமுறைகளுக்குப்பின் னரசுபூண்ட உதயணனென்பான் பாடலீபுரவரணை விரிவுபெறச்செய்து, மகதத்துக்குப் பேரரசவீடாக்கினன். ஆயினு மிவ்வரசவம்சத்தினழிவு அண்மைத்தாயிற்று. உட்கலமும், புறநாட்டுப்படையெழுச்சியுமே யிதற்குக்காரணங்களாயிருந்திருக்கவேண்டும். மாளவதேயத்து ராஜதானியான உஜ்ஜயனியையாண்டு, சண்டமஹாசேனனென்று மறுபெயர்பூண்டு, வாஸவதத்தையின் பெற்றோனாய்விளங்கிய பச்சோதனன்படையெழுச்சி மகதத்தை வலியழியச்செய்ய, அரண்மனையுட்கலகம் சிசுநாகவம்சத்தை நாசமடையச்செய்தது. சிசுநாகர்கள் மடியவே நந்தர்கள் மகதாதிபதிகளானர்கள். அன்னியாயார்ஜ்ஜிதமான விப்பெரும்பேறு இருதலைமுறையே நந்தர்களிடம் வதிந்து சந்திரகுப்தமௌரியனல் ஆக்கிரமிக்கப்பெற்றது நன்கறியப்பட்ட விஷயமே.

மத்தியராஷ்டிரங்களில் இவ்வகையான அரசியற்புரட்சிநிகழ்ந்து நடைபெறுங்காலத்திலேயே, இவ்வுலகத்தில் பராக்கிரம உரிமைபூண்ட மஹாபுருஷர்களிலொருவன் வரவால், மேல் எல்லைநாடுகளெல்லாம் மிகக்கலக்கம்பெற்றன. கிரேக்க நாகரீகம்வாய்க்கப்பெற்ற இவ்வாலிபமஹான் மாஸிடோனியா (Masidonia) தேயத்துச் செங்கோல்கொண்ட பெருமாண்புபூண்ட அலெக்ஸாண்டர் என்பான். இவன் தன்தேயத்தினின்றும் புறப்பட்டுப் போர்த்தலைவர்க்

குறித்தான வல்லாண்மையோடு உலகசமாசாரங்களையெல்லாம் நாடியறிவதில் அடங்கா ஆவல்பூண்டவனாய்க் கிழக்கு நோக்கிப் படையெடுத்துச்சென்றனன். பெருவன்மையோ டெதிர்க்கப்படாதவனாய்ப் பாரஸீக சக்கிராதிபத்தியம் முழுதுங்கடந்து காபூல் (Kabul) நதியின் இடதுகரைவழியாய் ஆடக் (Attock) என்னுமிடத்தில் ஸிந்துநதியைக்கடந்தேறி, காந்தாரவரசனாகிய ஆம்பியென்பவனால் ஆதரத்துடனழைக்கப்பெற்றவனானான். ஏனெனில், இக்காந்தாரவரசனுக்கும் அவன் அயற்றேயத்தனாய புரூரவஸ் என்பவனுக்கும், வெகுவான மனவெகுட்சி நிலைபெற்றிருந்தது. கிரேக்கர்களால் அயோர்நாஸ் (Aornos) என்று குறிக்கப்படும் மலையரணைக்கைக்கொள்வது இப்பெரும்போர்வலானுக்குங்கூட அஞ்சாதவன்மையாலும், எஞ்சாத சாதுர்யத்தாலுமே இயன்றது. இப்பெருமுயற்சி கைகூட்வே அலெக்ஸாண்டர் பெஷாவர் (Peshawar) சமநிலைக்கூற்றைக்கடந்து ஜீலநதிக்கரை சேர்ந்தான். இங்கே தான் கடைசியாய்த் தனக்குத் தக்க வீரனைக்கண்டு அவனோடு பெரும் போர்செய்யவியன்றது. இப்போரின் கடைசியில் புரூரவன் தோல்விபெற்றானாயினும், அவன் பராக்கிரமத்தினால் அலெக்ஸாண்டரை மிக மகிழ்வுறச்செய்து முன்னைக்காட்டிலும் விரிவுபெற்ற தன்தேயத்தை மறுபடியுமவனிடம் பெற்றான். இங்கிருந்து கங்கையம்பேர் ஆற்றங்கரைப் புறஞ்செல்லமுயன்றவன், தன் சேனையின் படைக்கலகத்தினால் மீளவும் தன்னாட்டுக்குத்திரும்பிப் பெயர்வோனாயினான். மற்றொருகால் படையெடுத்துவர மனங்கொண்டோனாயினும், அஃது அசாத்தியமாயிற்று. மகததேயத்துட்புகுவது இவ்வாறு அலெக்ஸாண்டருக்கு முடியாமையாகவே, இம்முயற்சியில் யத்தனித்த சந்திரகுப்த மௌரியன், பஞ்சநதத்தினின்றும் படைகூட்டி மகதஞ்சென்று நந்தர்களைத் தம்மாட்சியுரிமையினின்றும் விலக்கி, நீதிசாஸ்திர நிபுணனாகிய சாணக்கியன் பேருதவியால் மகதத்தைத் தனதாக்கிக்கொண்டான். இவ்வாறு மௌரியர்கள் மகதவரசுரிமைபூண்டது கி. மு. 321-ல் என்பர். இவ்வாண்டே இந்துதேசசரித்திர காலவரையறையில் திண்ணமான முதல் காலக்குறியாகும். ஆட்சிபூண்ட பத்துவருஷங்களுக்குள் சந்திரகுப்தன் தன் பலாபலங்களையொரு வாறுகவமைவுபெறச் செய்து இந்தியாவின் வடபாகமான இந்து

ஸ்தானத்துக்கெல்லாம் ஏகாதிபதியாயினன். இதற்குள் புரூரவன் கொலையுண்டான். கி. மு. 305-ம் வருஷத்திலோ அதற்குக்கொஞ்சம் முற்படவோ அலெக்ஸாண்டரின் தளகர்த்தர்களில் உயர்ந்தபதவிக்குரிய உவப்புப்பெற்ற ஸிலூயகஸ் என்பவன் அலெக்ஸாண்டரிறந்தபின், அவன் ஆசிய ஆதிபத்தியவதிகாரம் பூண்டு இந்தியதேயத்தின்மேற்படையெடுத்துவந்தான். இவ்வமயம் இந்தியர்கள் ஐரோப்பியர்களைத் தோல்விபெறச்செய்யவே, ஜயசீலனென்று சிறப்புப்பெயர்பெற்ற ஸிலூயகஸ் தனக்குத் தாழ்வான ஒப்பந்தத்துக்குட்பட்டுச் சந்திரகுப்தனுக்குத் தன்னாதிபத்தியத்தின் கீழ்ப்பிரிவையெல்லாம் அளித்தான்.

இதுமுதல் சந்திரகுப்தனுடைய ஏகாதிபத்தியம் பங்காளகுடாவினின்றும் ஆப்கானஸ்தானத்துக்குக்குறுக்கேயோடும் மலைகள்வரையும் அகன்று விந்தியத்துக்கும் இமையத்துக்கும் நடுவே நின்றது. இப்பெரிய அதிராஜ்யம் தொன்றுதொட்டுவந்த வழிக்கிணங்க, சக்கரவர்த்திக்குட்பட்டு அவர் சேனைக்குத் தங்கள் தங்களுக் கேற்பட்ட படையைச்செலுத்திவருபட்டும், மற்ற விஷயங்களிலெல்லாரும் சுவதந்திரம்பூண்டு நடக்கும்படி சிற்றரசர்பால் அமைக்கப்பெற்றுநின்றது. ஏனெனில் அக்காலத்தில் தேசத்தினின்று தேயஞ்செல்வது அசாத்தியமல்லாவிடினும் மிக அலைச்சற்கும் தாமதத்துக்கும் இடங்கொடுப்பதாகவிருந்தது. இந்நிலைமையிலுங்கூட இவ்வதிராஜ்யம் நீடித்து நின்றிருந்தல்கூடும். ஆயின் இதற்குடன்பட்ட பலவரசர்களும் ஒருவருக்கொருவரிணங்கி, தாங்கள் மேற்பூண்டகாரியங்களை சிரத்தையோடும் நிறைவேற்றித் தேயத்தின் நன்மையையே கருதினவர்களாயிருந்திருத்தல்வேண்டும். இஃதெல்லாம் இக்காலத்துக்கொள்கைக்கும் பிரசங்கற்பங்களுக்கும் முரண்பட்டுநின்றிருந்தது போலும்.

சந்திரகுப்தன் பின் வந்தோனாய பிந்துஸாரன், தன்முன்னோன் வழியேசென்று மௌரியவதிராஜ்யத்தை அதிகரிக்கச்செய்தவனாய்த் தனக்கடங்கிய மஹாமண்டலங்களில் முதன்மையான விரண்டு எல்லையாதிபத்தியங்களில் தன் மக்களிருவரை நிலைபெறச்செய்தான். இவ்விருவர்களில் மூத்தோன் தக்ஷசிலையினின்றுங் காந்தார

தேயத்தையும்,இளையோனைப்பிறகுபெருஞ்சிறப்புப்பெற்ற அசோகனென்பான் விதிசாநகரம் வதிந்து தக்ஷிணபத எல்லைப்பிராந்தியத்தையும் தந்தையினையுள்வரையும் ஆண்டுவந்தார்கள். காலக்கிரமத்தில் பிந்துஸாரன் மரணமடைய பௌத்தமதப்பிரகடனத்தில் பெருமுயற்சிபூண்ட அசோகனென்பான், தக்ஷசிலையிலாண்ட தன் மூத்தோனோடும்பொருது அவனை மாளச்செய்து இவ்வுயர்பதமுற்றான். தன்முன்சென்ற விருபெருமக்களைப்போலத் தானுந் தன் ஆதிபத்தியத்தை விரிவுபெறச்செய்ய முயன்று கலிங்கதேயம் ஒன்றையே தன்னெல்லைக்குட்படுத்திக் கொண்டவனானான். இவன் வென்றது இது ஒன்றேயாயின் பிறதக்ஷிணபததேயங்களெல்லாம் இவன் மூதாதை காலத்திலேயே ஒருவாறு அடிப்படுத்தப்பெற்றிருத்தல் வேண்டும். கலிங்கப் பெரும் போரில் மடிந்த ஜனங்களுக்காகப் பரிதபித்து, தான் முற்கொண்ட பிராமணக்கொள்கைகளினின்றும் நீங்கி,பௌத்தக் கொள்கைகளை மேற்கொண்ட ஒரு பெரும்பூதமென்றே பௌத்தர்கள் அசோகன்பூர்வ நிலையை வர்ணிப்பார்கள். அஃது எற்றேனும் ஆகுக. இவ்வசோக சக்கிரவர்த்தி கற்பித்த அருள்வாய்ந்த மதக்கொள்கைளும், நோயடைந்தமக்கட்கும், பிராணிகளுக்குமிவன் நிருமித்த தர்மசாலைகளும், பௌத்தக்கொள்கைகள் பரவ இவன் பூண்ட முயற்சிகளும், பௌத்தவுபதேசங்களையெல்லாம் சேர்த்துத் தொடுக்க விவனுழன்றவுழற்சியும், எல்லோர்க்கும் நன்கு விளங்கியவிஷயமே. வெகு மாறுபாடுகள் பெற்றிருந்தபோதிலும், இவ்வதிராஜ்ய வாட்சி தொன்றுதொட்டுவந்தவழிபோன்று, மனிதமாறுபாடொழிய மதமாறுபாடின்றி நின்றது. அவ்விராஜ்யமோவெனின், தென்பால் மைசூர் ராஜ்யவரையகன்று பன்னிரண்டாம் உத்தரவலயத்தோடொத்ததாயிருந்தது. இவ்வகன்ற ஏகாதிபத்தியத்தின் எல்லைகளிலும் உள்நாட்டிற் சிலவிடங்களிலும் கற்குன்றின் மேலும், இவையல்லாவிடத்துங் கற்றூண்களை நாட்டி அவைகளின் மேல் தம்மாட்சிக்குட்பட்டவர்களுக்குத் தானமளித்த தயை வாய்ந்த ஆஞ்ஞைகளை வரைந்துள்ளான். தவிர பௌத்த அர்ஹத்துக்களின்பிரேத்திய அவசேஷங்கள் பொதிவுபெற அநேகமாயிரம் ஸ்தூபங்களையும் கட்டுவித்தான். இவைகள் தாம் அசோகசரித்திரத்துக்கு இக்காலத்தில் அரியபெரிய சாதனங்களாய் உள்ளன. அசோ

கனுடைய மதப் பிரசார முயற்சி பௌத்த மதத்தை ஆசிய மேற்குக் கடைசியிலுள்ள ஸிரியா தேயம் வரைக்கும் பரவச் செய்ததென்று ஐயமின்றிச் சொல்லலாம். அசோக ஆஞ்ஞா விகிதங்களினின்றும், இந்தியத்தென்மூலையிலிருந்த சோழபாண்டிய கேரள ஸத்யபுத்திரமென்னும் நான்கு அரசுகளோடும், ஈழத்தோடும், சந்தி செய்ததன்றி; ஆசிய மேல்எல்லையிலும், ஐரோப்பியக் கீழ்நாடுகளிலுமாண்டவரசர்களும் உடன்பாடுற்றனரென்றும் தெரியவருகிறது. இங்ஙனம் உடன்பாடுபெற்றவர்கள் ஐவர் :— ஸிரியதேயத்திய ஆண்டியாகஸ் (Antiochus); இஜிப்திய தாலமி (Ptolomy); கைரினிய மாகாஸ் (Magas); மாஸிடன்தேயத்திய ஆண்டிகானஸ் கோனடாஸ் ( Antiogonus Gonatas ); எபிரஸ்தேயத்திய அலெக்ஸாண்டர் (Alexander); இவர்களேயாவர். மஹபி (Mahappy) பண்டிதர் கொள்கைப்பிரகாரம் கி. மு. 200-க்கு முன் ஸிரியா, பாலஸ்டின் தேயங்களில் பௌத்தபிக்ஷுக்கள் மதப்பிரஸங்கஞ் செய்தனரென்பது திண்ணம். இதேமாதிரி அசோகன் 84,000-மதப்பிரசாரகரை இந்துதேயமுழுதிலும், அதற்கு வெளிநாடுகளிலும் பரவச்செய்ததுமன்றித் தன்னுடன்பிறந்தோர்களாகிய (மக்களென்று சிலர் கொள்கை) மாஹேந்திர ஸங்கமித்திரர் என்பவர்களை ஈழத்துக்கனுப்பினதாகத்தெரியவருகிறது. தன் அகன்ற அதிராஜ்யத்தைத் தண்ணளியோடுமாண்டு, பௌத்தமதத்தைத் தன்னாலியன்றமட்டும் பரவச்செய்து, விதிவலியால் தம்மேனின்ற பெரும்பொறையைத் தாங்க வலியற்ற உத்தராதிகாரிசள் பாற்படவிட்டு, அசோகனென்பவன் இவ்வுலகவாழ்வின் பெரும்பொறை தவிர்ந்தோனாயினன்.

நான்கு உத்தர வதிகாரிகளாற் றொடரப் பெற்றபிறகு அசோகராஜவம்சம் முடிவடையவே, சேனாதிபதி புஷ்யமித்திரன் என்பான் அதிராஜ்யம்பெற்று சுங்கராஜவம்சத்துக்கு மூலபுருஷனானான். அசோகன் பின் ஆட்சிபெற்ற பிரஹத்ரதனைப் படைக்காட்சித்தருணத்தில் கொலைபுரிந்து தான் அப்பதத்துக்கேறினான் இப்புஷ்யமித்திரனென்று சொல்லுப. இக்காலத்து ராஜபக்தியுள்ள அதிகாரியொருவன் மௌரியச்சிவனெனப்பெயர்வாய்ந்து, காளிதாஸ மகாகவியின் மாளவிகாக்கினி மித்திரத்தில் அமைக்கப்பெற்றுள்ளான். அந்நாட

கத்தில் இவ்வைச்சன் விதர்ப்பராஜன் மைத்துனனுப் சிறைப்பட்டுக்கிடந்தானை, அவ்விதர்ப்பராஜன் விடுவிக்குமுயன்றதாக வமைத்துள்ளது. காளிதாஸரோ, தமக்குமுன்னோராய்க் கதை நிகழ்ந்தகாலத்து வதிந்தவராலேயே யெழுதப்பட்ட சில நூல்களின் வழிநூலாகவே தம் நாடகத்தை யமைத்ததாகச்சொல்லுகிறாராதலின், அந்நாடகம் இந்நிகழ்ச்சியை நன்குவிளக்குமென்பதற்கையமில்லை. புஷ்யமித்திரன் ராஜ்யாபகாரமோ வெளியினின்றும் ஆட்சேபணை பெறாமற்போகவில்லை. புஷ்யமித்திரன் ராஜ்யத்தில்நிலைபெறுமுன்னமே வெளியினின்றும் பகையரசிருவர்களால் அச்சுறுத்தப்பட்டான். இவ்விருவருள் பௌத்த பரம்பரையில் மிலிந்தனென்று வழங்கப்படும் மீனண்டர் என்போன் வடமேற்குத்திசையினின்றும், கலிங்கராஜனான காரவேலனென்பான் தென்பக்கமிருந்தும் போர்வேட்டார்கள். கிழக்கே சாகேதம் வரையும் நாடழித்து, ராஜஸ்தானத்து சித்தூருக்கருகிலிருக்கும் மாத்தியமிகையை முற்றிமீண்டான் மீனண்டர் என்பான். இவனுக்குப்பின் ஓர் ஐரோப்பியப் போர்வீரனும் வடமேற்குப்பக்கத்தினின்றும் தலமார்க்கமாய்வரவில்லை. வாஸ்கோடிகாமாவுக்கு முன், எம்மார்க்கமாயும் இத்தேயம்வர அவர் யத்தனம் முடியவுமில்லை. இம்மீனண்டரின் படைக்கூறொன்றுதான் அக்கினிமித்திரன் புதல்வனாய வஸுமித்திரனால் மத்தியதேயத்து ஸிந்துக்கரையில் தோல்வியடைவிக்கப்பட்டதென்பர் ஸ்மித்என்னும் இந்தியசரித்திரகர்த்தர். ஆயின் இப்போர்க்களம் பெரிய ஸிந்துக்கரையேயென்பதற்குத் தக்கசான்றுகளுண்டுபோலும். எவ்வாறெனில், ராஜஸூயம் வேட்டு, அக்கினிமித்திரனென்னும் புதல்வனை மாளவதேயத்துத் தன்னதிகாரியாய்க்கொண்ட புஷ்யமித்திரனுடைய மத்தியதேயத்து ஸிந்துக்கரையிலே வரம்புபெற்றதென்பது நேர்மையாகாது. இப்படியே கலிங்கராஜனான காரவேலனையும் வெற்றிகொண்டு, அசோகன் காலத்திருந்தாற்போலவே கலிங்கத்தையும் தன்னாட்சிக்கு உடன்படச் செய்தான். இப்புஷ்யமித்திரன்காலமே, வியாகரணபாஷ்யகாரரான பதஞ்சலிவதிந்த காலமும், பிராமணமத முற்சாகம்பெற்ற காலமுமாயிருந்தது. ஆயின் இவன் மதக்கொள்கையேகாரணமாய்ப் பௌத்தர்களை யிடர்ப்படுத்தினனென்பதற்குத் தக்க சான்றில்லைபோலும். தன்தாதை

பிரதிநிதியாயிருந்தாண்டகாலத்திலேயே அக்கினிமித்திரன் விதர்ப்ப தேயத்தை ஆதீனப்படுத்திக்கொண்டு, இக்காலத்து மத்தியப் பிராந்தியத்தி லிருசிற்றரசர்களை நிலைபெறச்செய்தான்.

புஷ்யமித்திரன் பெருஞ்செயல்கள் மிகவும் விளக்கம்பெற்றனவாயினும் அவன் வம்சத்தை நீடித்து நிலைபெறச்செய்யப் பயன்படாவாயின. பஞ்சநதமும், வடமேற்கு நாடுகளும் கலக்கமுற, முங்கோலியக் குழுவினர் சீன எல்லைப்பிராந்தியங்களினின்றும் நடைபெறவாரம்பித்தனர். இவர்களசைவு லிந்து நதிக் கரைவரை தாக்கியதாயிருந்தது. மூன்று தலைமுறைகட்குள்ளேயே சுங்கவம்சம் உட்கலகத்தினாலே அழிவுபெறவே கண்வாயன வம்சத்தியர் அரைசதமானம் ஆட்சிபெற்றவரானார்கள். கிருஷ்ணாவுக்கும், கலிங்கத்துக்குமிடைப்பட்ட நாடேறி, திராவிடப்பெருங்குழுவின் ஒருபகுதியாகிய தக்ஷிணதேயத்து ஆந்திர அரசவம்சத்தாரால் இக்கண்வர்கள் சீர்குலைந்தவர்களானார்கள்.

பிராமண கண்வர்கள் நிலைகெட்டு ஆந்திரர் பெரும்பதம்பெற்ற கி. மு. 27-ம் வருஷம், இந்தியசரித்திரத்தில் நிலைபெற்ற காலவரையறையாய்நிற்கிறது. அதுமுதற்கொண்டு இதுகாறும் கரந்துகிடந்த விந்திய தென்கூறானதேயம் சரித்திரவாராய்ச்சிக் கிணங்கிவருகிறது. இனிமேல் சரித்திரவிவரணத்திலிந்தியதேசத்தை மூன்றுகூறாக எடுத்தாளவேண்டும் எவ்வாறெனின்; இந்தியவடபாற்றாய இந்துஸ்தானம் ஒரு கூறும், இந்தியத்தென்பாற்றாய கிருஷ்ணாநதிவரை கிடந்த தேயம் மற்றொரு கூறும், கிருஷ்ணைக்குத்தென்புறம் மூன்றாவது கூறுமேயாம்.

(தொடரும்.)

உ

திருச்சிற்றம்பலம்.

# கல்லாடர்.

——:o:——

"சொல்லென்னும் பூம்போது தோன்றிப் பொருளென்னும்
நல்லிருந் தீந்தாது நாறுதலான்—மல்லிகையின்
வண்டார் கமழ்தாம மன்றே மலையாத
தண்டாரான் கூடற் றமிழ்"

என நல்லிசைப் புலவர்களெல்லாம் மனமொத்து நாவாரப்புகழும் பெருமைவாய்ந்த தமிழ் அரசு வீற்றிருப்பப்பெற்ற மதுரைமாநகரிலுள்ள கடைச்சங்கப்புலவர் நாற்பானென்பதின்மருள் ஒருவரே இக்கல்லாடர். ஒல்காப் பல்புகழ்த் தொல்காப்பியத்துக்குரைகண்ட நச்சினார்க்கினியரை யுள்ளிட்ட ஐவர் உரையாசிரியர்களுள் ஒருவர். "ஒல்காப்பெருமைத்தொல்காப்பியத்துக், குரையிடையிட்ட விரகர் கல்லாடர்" எனப்பிறாண்டும் வருதல் காண்க. கடவுட்புலமைத் திருவள்ளுவரருளிச்செய்த திருக்குறளின் சிறப்புப்பாயிரமாகிய திருவள்ளுவமாலையிற் "கல்லாடர்" எனக் குறிப்பிடப்பட்டாரும் இவரே. இவர் நாயனாருடைய தெய்வத்தன்மை வாய்ந்த நுண்மதித் திறனையும் அப்பெரியாரருளிய திருக்குறள் என்னும் நூற்றிறனையும் நன்காய்ந்து உள்ளவாறுணர்ந்த உத்தம புலவர். கல்லாடர் திருக்குறளைப், பொது வேதம் என்பர்.

"ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனி
னன்றென்ப வாறுசமயத்தார்—நன்றென
வெப்பாலவரு மியைபவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்தமொழி"

என்பது திருவள்ளுவமாலை. இக்கருத்தே யமையத் தாமியற்றிய கல்லாடத்தினும்,

"சமயக் கணக்கர் மதிவழிகூறா
துலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவிபாடிய முக்கட்பெருமான்"

எனக் கூறியிருத்தல் காண்க. இதனன் நாயனர், குறளை அரங்கேற்றியகாலத்துடனிருந்த புலவர் நாற்பானென்பதின்மர்களுள் இவரும் ஒருவர் என்பதும் திருவள்ளுவமாலையிற் கூறப்பட்ட கல்லாடரும் இக்கல்லாடரும் வேறல்லர் என்பதும் நுணுகி யாராய்வார்க்கு இனிது புலப்படும். தெய்வப்புலவராம் நம்பெரியாரருளிச் செய்த திருக்குறளின்கண், "தேரான்றெளிவுந் தெளிந்தான்கணையுறவுந், தீராவிடும்பைதரும்" எனத் தெளிவிற் கெல்லையாகக் கூறப்பட்ட திருக்குறளை, கல்லாடர் தாமியற்றிய கல்லாடத்தினும் "தேரான் றெளிவெனுந் திருக்குறட்புகுந்து" எனக் கூறியிருத்தலும் ஈண்டாராயத்தக்கதாம். இதனன் நாயனருடைய குறள் அரங்கேற்றத்தின் பின்பே கல்லாடம் இயற்றப்பட்டதென்பது நன்கு துணியப்படும். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை நக்கீரர் நெடுநல்வாடையிற் புகழ்ந்தாங்கு இக்கல்லாடரும் அவன் பெருமையை ஓர் அகவற்பாவாற்றெரித்துள்ளார். அம்பர் கிழான் என்னும் வேளாண்பிரபுவைப்பாடினரும் இவரே. கோவலனை ஆராயாதுகோறல் புரிவித்தவனே இந்நெடுஞ்செழியன் என ஊகிக்கப்படலாம், "கண்ணப்பதேவர் திருமறம்" என ஒரு நூல் இயற்றினரும் இக்கல்லாடரே எனச் சிலர் கூறுகின்றனர். நக்கீரர் பாடியதும் வேறு. இப்பெரியாரால் செய்யப்பட்ட அரிய நூல் கல்லாடம் ஒன்றுமேயெனத் தெரிகின்றது. இதனை இவரே செய்தாரென்பதை,

"வாய்ந்தபொருட் கொருபொருளாய்க் கலைவாணிக் கருள்கொழிக்கு மனமாய்ப்பாரி, னைந்தமுது தமிழ்வடித்துக் கல்லாடமெனவொருநூ லருளியிட்டார், தேய்ந்தமதிச் சடைப்பரமர் கருணைபெறச் சங்கமுது செல்வர் வாழ்த்தக், காய்ந்தபுல னடக்கியுயர் பெருஞானம் பழுத்தருள்கல் லாடனரே"

என்னும் விருத்தத்தானறியப்படும்.

"கல்லாடர் செய்பனுவற் கல்லாட நூறுநூல்
வல்லார் சங்கத்தில் வதிந்தருளிச்—சொல்லாயு
மாமதுரை யீசர் மனமுவந்து கேட்டுமுடி
தாமசைத்தார் நூறு தரம்"

உ

திருச்சிற்றம்பலம்.

# கல்லாடர்.

—:o:—

"சொல்லென்னும் பூம்போது தோன்றிப் பொருளென்னும்
நல்லிருந் தீந்தாது நாறுதலான்—மல்லிகையின்
வண்டார் கமழ்தாம மன்றே மலையாத
தண்டாரான் கூடற் றமிழ்"

என நல்லிசைப் புலவர்களெல்லாம் மனமொத்து நாவாரப்புகழும் பெருமைவாய்ந்த தமிழ் அரசு வீற்றிருப்பப்பெற்ற மதுரைமாநகரிலுள்ள கடைச்சங்கப்புலவர் நாற்பானொன்பதின்மருள் ஒருவரே இக்கல்லாடர். ஒல்காப் பல்புகழ்த் தொல்காப்பியத்துக்குரைகண்ட நச்சினார்க்கினியரை யுள்ளிட்ட ஐவர் உரையாசிரியர்களுள் ஒருவர். "ஒல்காப்பெருமைத்தொல்காப்பியத்துக், குரையிடையிட்ட விரகர் கல்லாடர்" எனப்பிறுண்டும் வருதல் காண்க. கடவுட்புலமைத் திருவள்ளுவரருளிச்செய்த திருக்குறளின் சிறப்புப்பாயிரமாகிய திருவள்ளுவமாலையிற் "கல்லாடர்" எனக் குறிப்பிடப்பட்டாரும் இவரே. இவர் நாயனருடைய தெய்வத்தன்மை வாய்ந்த நுண்மதித் திறனையும் அப்பெரியாரருளிய திருக்குறள் என்னும் நூற்றிறனையும் நன்காய்ந்து உள்ளவாறுணர்ந்த உத்தம புலவர். கல்லாடர் திருக்குறளைப், பொது வேதம் என்பர்.

"ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனி
னன்றென்ப வாறுசமயத்தார்—நன்றென
வெப்பா லவரு மியைபவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்தமொழி"

என்பது திருவள்ளுவமாலை. இக்கருத்தே யமையத் தாமியற்றிய கல்லாடத்தினும்,

"சமயக் கணக்கர் மதிவழிகூறா
துலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவிபாடிய முக்கட்பெருமான்"

எனக் கூறியிருத்தல் காண்க. இதனான் நாயனார், குறளை அரங்கேற்றியகாலத்துடனிருந்த புலவர் நாற்பானென்பதின்மர்களுள் இவரும் ஒருவர் என்பதும் திருவள்ளுவமாலையிற் கூறப்பட்ட கல்லாடரும் இக்கல்லாடரும் வேறல்லர் என்பதும் நுணுகி யாராய்வார்க்கு இனிது புலப்படும். தெய்வப்புலவராம் நம்பெரியாரருளிச் செய்த திருக்குறளின்கண், "தேரான்றெளிவுந் தெளிந்தான்கணையுறவுந், தீராவிடும்பைதரும்" எனத் தெளிவிற் கெல்லையாகக் கூறப்பட்ட திருக்குறளை, கல்லாடர் தாமியற்றிய கல்லாடத்தினும் "தேரான்றெளிவெனுந் திருக்குறட்புகுந்து" எனக் கூறியிருத்தலும் ஈண்டாராயத்தக்கதாம். இதனான் நாயனாருடைய குறள் அரங்கேற்றத்தின் பின்பே கல்லாடம் இயற்றப்பட்டதென்பது நன்கு துணியப்படும். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை நக்கீரர் நெடுநல்வாடையிற் புகழ்ந்தாங்கு இக்கல்லாடரும் அவன் பெருமையை ஓர் அகவற்பாவாற்றெரித்துள்ளார். அம்பர் கிழான் என்னும் வேளாண்பிரபுவைப்பாடினாரும் இவரே. கோவலனை ஆராயாதுகோறல் புரிவித்தவனே இந்நெடுஞ்செழியன் என ஊகிக்கப்படலாம். "கண்ணப்பதேவர் திருமறம்" என ஒரு நூல் இயற்றினாரும் இக்கல்லாடரே எனச் சிலர் கூறுகின்றனர். நக்கீரர் பாடியதும் வேறு. இப்பெரியாரால் செய்யப்பட்ட அரிய நூல் கல்லாடம் ஒன்றுமேயெனத் தெரிகின்றது. இதனை இவரே செய்தாரென்பதை,

"வாய்ந்தபொருட் கொருபொருளாய்க் கலைவாணிக் கருள்கொழிக்கு மனமாய்ப்பாரி, னாய்ந்தமுது தமிழ்வடித்துக் கல்லாடமெனவொருநூ லருளியிட்டார், தேய்ந்தமதிச் சடைப்பரமர் கருணைபெறச் சங்கமுது செல்வர் வாழ்த்தக், காய்ந்தபுல னடக்கியுயர் பெருஞானம் பழுத்தருள்கல் லாடனாரே"

என்னும் விருத்தத்தானறியப்படும்.

"கல்லாடர் செய்பனுவற் கல்லாட நூறுநூல்
வல்லார் சங்கத்தில் வதிந்தருளிச்—சொல்லாயு
மாமதுரை யீசர் மனமுவந்து கேட்டுமுடி
தாமசைத்தார் நூறு தரம்"

இவ்வெண்பாவாற் கல்லாடராற்செய்யப்பட்டன நூறு நேரிசையாசிரியப்பாக்களே யென்பதும், நூற்சிறப்பும், நூல்கேட்டார் இவர் என்பதும் அறியலாவன.

"போதவூர் புகுந்த புண்ணியப்பெருந்தகையாம் வாதவூரடிகள் அருளிச்செய்த திருச்சிற்றம்பலக்கோவையாரின் பெருமை விளக்கற்காகவே கல்லாடர் இதனைச்செய்தார் என்பர். இந்நூலுட் கூறப்படும் நூறு நேரிசையாசிரியப்பாக்களும், மொழிசுருங்கன் முதலிய பத்தழகோடு சிவணித் தேனெனப்பாலெனத்,தெள்ளமிர் தூற்றெனக் கற்றறிந்தார்க்கு மிக இனிமை பயப்பன. தமிழ்வளம் நிரம்பவும் புதையப்பட்டுள்ளன. "கல்லாடங்கற்றுரோடு மல்லாடேல்" என்னும் ஆன்றோர்வாக்கே இதனை வலியுறுத்தும்.

கல்லாடர், இந்நூறு ஆசிரியப்பாக்களானும், கடைச்சங்ககாலமும் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்த புலவர்தொகையும், கடைச்சங்ககாலத்து நடந்த சில அற்புதசம்பவங்களும் கூடன்மாநகரி லெழுந்தருளிய இடக்கரத்தனலேந்திய மடக்கொடிபாகனும் செங்கிறவானவன் உஞற்றிய பல திருவிளையாடல்களும் பாரதராமாயண சரிதங்களும், கண்ணப்பர், காரைக்காலம்மை, சாக்கியநாயனர், மூர்த்திநாயனர், மார்க்கண்டேயர் முதலியபல அன்பர்களின் திருத்தொண்டுப் பெருக்கவீறும், இன்னும்பலபெரியாரின் அருமைச்சரித்திரங்களுமாகிய இன்னனபிறவற்றை எல்லாம் எடுத்துக்கற்றவர்காமுறும் வண்ணம் கூறிச்செல்கின்றார்.

அ. க. வைத்தியநாத தேசிகர்.

உ

# திருக்குறளாராய்ச்சியாக்கேபம்.

---:o:---

சென்ற சித்திரை மாதச் "செந்தமிழ்"ப் பத்திரிகையிலே சோழவந்தான் ஸ்ரீமத்-அ. சண்முகம் பிள்ளை என்பவர் "திருக்குறளாராய்ச்சி" என்று பெயரிட்டெழுதிய விடயத்திலே பல ஆக்கேபங்கள் தோன்றுகின்றன. அவற்றுட் சிலவற்றை விடையறியும் பொருட்டு ஈண்டுக் கூறுதும்.

க. "திருக்குறளாராய்ச்சி" என்று பெயரிட்டுப் பின் "விருத்தி எழுதப்படும்" எனவும் "விருத்தியுரை" எனவும் கூறினரே. இவையிரண்டும் தம்முள்ளே முரணுவா? இவர் கூறும் விடயத்திலே அதிகரித்து நின்றது யாது? ஆராய்ச்சியா? விருத்தியா?

உ. அதன்பின் "அறத்துப்பால் - பாயிரவியல்" என்றார். அவையும் இயைபு பெறுமா? அறத்துப்பால் என்பதன் பின் அதனை விளக்கி எழுதிய "இந்திரன் முதலிய" என்றற் றொடக்கத்து வாக்கியங்கள் வரவேண்டியன அல்லவோ? அவைகளை "அகரமுதல" என்றதன்பின் வைத்தவாறென்னை? அறத்துப்பால் முடிந்தபின் "இனி" என்று தொடங்கிப் பொருட்பாலையும், அது முடிந்தபின் "இனி" என்று தொடங்கிக் காமத்துப்பாலையும் பற்றிச் சிலசில வாக்கியங்கள் வரைந்து, "கூறுகின்றார்" என்பனவற்றாலே பரிமேலழகர் அதிகார சங்கதி கூறியதனை ஆராயாததென்னையோ? பால்களை விளக்கும் வாக்கியம் ஓரதிகாரத்திற்குரிய ஒரு கவியின் பின்னிற்றல் இயையுமா? பாயிரமாவது யாது? பாயிரமும் இயல் என வழங்கப்படுமா? பாயிரம் என்னுஞ் சொல்லின் பொருள் யாது? இயல் என்னுஞ் சொல்லின் பொருள் யாது? பாயிரம் என்பது வடசொல்லா? தென்சொல்லா? உரைப்பாயிரமாவது யாது? இவை விரித்தற்பாலன வல்லவா.?

ங. அதன் பின் "முதலாவது அதிகாரம் கடவுள் வாழ்த்து" என்றார். இரண்டாவது அதிகாரத்தினின்றும் வேறாகுமா? அங்ஙன

மின்றாகவும் முதலாவது அதிகாரம் என்றதென்னையோ? "முதலாவது தெய்வப்பெயர்த் தொகுதி" "இரண்டாவது மக்கட்பெயர்த் தொகுதி" என வேறு வேறாகக் கூறு மிடத்தன்றி அதிகாரம் என ஒன்றையே கூறுமிடத்தும் இங்ஙனம் கூறுதல் பொருந்துமா? முதலாவது அதிகாரம் என்றற்கும் முதலாம்அதிகாரம் என்றற்கும் பேதமில்லையா?

௪. அதன் பின் "அகரமுதல" என்னும் கவிகூறி "என்பது முதற் பாட்டு" என்றார். குறட் பாக்கள் முழுவதுக்கும் இவ்வாறு கூறுங் கருத்தோ? இஃது நின்று பயனின்மை என்னுங் குற்றத்திற்கு இடனாகாதா.?

௫. அதன்பின் "இதற்குப் பரிமேலழகருரையினைக் காண்டிகையாகக்கொண்டு விருத்தி எழுதப்படும்" என்றார். இவரால் எழுதப்படும் விருத்தி "அகர முதல" என்னும் இக்குறளுக்கு மாத்திரந் தானா? அங்ஙனமாயின் பின் "பரிமேலழகருரையே சிறப்புடைத்தாதலின் அதனைக் காண்டிகையுரையாகக் கொண்டு அவ்வுரையுட் பொருந்தாமை மறுத்து ஏனையவற்றோடு விரிப்பன விரித்துஇவ்வுரை எழுதப்படும்" என்றதென்னோ? முழுவதும் என்பதுதான் கருத்தாயின், பின்வாக்கியம் போதாதா?

பரிமேலழகருரையை விருத்தியுரை என்று அதன் பாயிரமும், பதஞ்சலி மாபாடியம் போன்றது என்று மீனாட்சிசுந்தரப்பிள்ளை பாயிரமும் கூறுகின்றது. இதனை "திருத்தகு சீர்த்தெய்வத்திருவள்ளுவர்தங், கருத்தமைதி தானே கருதி, விரித்துரைத்தான்-பன்னு தமிழ்தேர் பரிமேலழகன்" எனவும், "அன்ன நூற் பெருமையுணர்ந் தான்றபா ணினிபுரிந்த வரியநூலுக், கின்னதீர் பதஞ்சலிபோற் பலருரையும் வியாப்பியமா யிருக்க நாளு, முன்னவாம் வியாபகமேயாகநூற் கருத்துணர்ந்தே மொழிந்தா ரென்ன" எனவும் வருஞ் செய்யுட்களானறிக. இவ்வியல்புடைய அவ்வுரை காண்டிகை என்று கொள்ளப்படுமா? அவ்வுரையிலே விருத்திக்குரிய இலக்கணம் அமைய வில்லையா?

௬. அவதாரிகையாவது யாது? தலைமைபற்றிவந்த எடுத்துக் காட்டுவமையாவது யாது? இதனைக் கூறும் அலங்காரம் யாது?

எ. "இனி, எந்நூலை யுரைப்பினும் அந்நூற்குப் பாயிரமுரைத்துரைத்தலே மரபாகலான் அஃதுரைக்கற் பாற்று" என்றார். இறையனார் களவிய லுரையின்படி அமைந்த இவ்வாக்கியத்திலே "உரைத்தல்" என்றது எதனையோ? உரை கூறலே யாயின், அறத்துப்பால் என்பதன்முன் பாயிரங் கூறி உரையும் கூறாது "அகரமுதல" என்னுங் கவியும் உரையும் கூறியபின் கூறத் தொடங்கி வேண்டுவன சிலகூறுதலும், பாயிரமாகிய திருவள்ளுவமாலைக்கு "இந்நூலிறுதியில் விருத்தியெழுதப்படும்" என்றலும் இயையுமா?

அ. "அப்பாயிரந்தான் இந்நூலை யரங்கேற்றுகாலை அவைக்களத்திருந்து கேட்ட நல்லிசைப்புலவரும், அவர்க்குப் பிற்காலத்திற் சங்கமேறிய நல்லிசைப் புலவருட் சிலரும் பாடிய திருவள்ளுவமாலையேயாம்" என்றார்.

திருவள்ளுவ மாலையிலே வரும் கவி பாடிய புலவருள்ளே அரங்கேற்றுங்கால் அரங்கிலிருந்து கேட்டவர்கள் யாவர்? பிற்காலத்திலே சங்கமேறினோர் யாவர்? ஏற்றிய அரங்கம் சங்கத்தின் வேறு?

௯. "ஆக்கியோன் பெயர் முதலாயவற்றை வேறு கூறப்படும்" என்றார். கூறப்படும் என்னும் செயப்பாட்டு வினைமுற்றிற்கு எழுவாய் யாதோ? இம்முடிபுடைய வாக்கியம் பரிமேலழகருரையிலும் வருமா?

௧0. திருவள்ளுவர் முதலிய ஒன்பது நாமங்களுமே ஆக்கியோன்பெயர் என்று திராவிடப் பிரகாசிகைகாரர், ஸ்ரீமாந்-ரா. இராகவையங்கார் முதலிய வித்வான்கள் அநுசரித்துக் கூறியிருத்தலை நோக்காது இவர் திருவள்ளுவமாலையிற் செய்யுட்கிசையச் சுட்டும் பெயர்களை எல்லாம் ஆக்கியோன் பெயரென்றல் பொருந்துமா? வாலறிவினர் என்பது வேறிடத்திலே தனியே கூறுங்கால் திருவள்ளுவரைக் குறிக்குமா?

௧௧. திருவள்ளுவ மாலையிலே வரும் "நாடாமுதனான்மறை" என்றகவி நாமகள் கூறிய தென்னாது வேறொருபுலவர் கூறியது என்பதற்குப் பிரமாணம் யாது?

கஉ. "வள்ளுவர் என்பது கருத்தனுகுபெயராய் நூலை யுணர்த்தும் என்பாருமுளர். அது பொருந்தாமை தொல்காப்பியவிருத்தியுட் காண்க" என்றார். தொல்காப்பிய விருத்தி செய்தவர் யாவர்? தொல்காப்பியச்சூத்திர விருத்தியை நன்குணர்ந்த திராவிடப்பிரகாசிகை காரர் அது பொருந்துமென அங்கீகரித்ததை இவர் நோக்காததென்னையோ? மேலும் கேட்போர் என்பதற்குத் தொல்காப்பியச்சூத்திர விருத்திகாரர் கூறிய வுரையைக் கொள்ளாமல் "உருத்திரசன்மருஞ் சங்கப்புலவருங் கேட்டார் எனக் கேட்போர் உணரப்படும்." என்ற தென்னே? உணரப்படும் என்பதற்குக் கேட்போர் என்னும் பலர்பாற் படர்க்கைப்பெயர் எழுவாயாக நிற்பதென்னே!

கங. ப்ரம்மஸ்ரீ: மஹாமஹோபாத்தியாயராகிய உ. வே. சாமிநாதையரவர்கள் "மணக்குடையார்" என்ற பாடத்தை இவர் "மணக்குடியர்" என்றும், "குன்றூர்கிழார்" என்பதனைக் "குன்றூர்க் கிழார்" என்றுங் கொண்டவாறென்னே?

கச. இலக்கண விளக்க நூலாரும் பிறரும் "இனியா" எனக் கொண்ட நூலை இவர் "இனியவை" எனக் கொண்ட தென்னே? இன்னலாக்குதலை 'இன்னு' என்றும் இனிமையாக்குதலை 'இனியா' என்றுங் கூறினர். (இலக்கணவி. பாட்டியல். கூக.)

கரு. சென்ற ஆனி மாதச் "செந்தமிழ்"ப் பத்திரிகையிலே "வெற்றிக்குக் காரணமாய படைச்செருக்கின் பெருமை யெனப் பொருள்படுமாறு பாயிரங்கூறி" என்றார். பழமொழியிலே இப்பொருள்படக் கூறப்பட்ட பாயிரம் யாதோ? அதனைக் கூறினர் யாவர்?

கசு. "கடவுள் வாழ்த்துக் கடவுளை வாழ்த்துதலாகிய ஒழுக்கம்" என்றார். ஒழுக்கம் என்பது யாது? இவ்வொழுக்கம் பிராமணர் முதலிய வருணந் தோறும் வேறுபாடுடைய ஒழுக்கம் போல்வதொன்றோ? பிறிதா?

கஎ. "கடவுளென்றது 'சார்பினுற் றோன்றாது தானருவாயெப்பொருட்குஞ்சார்' பெனநின்று பிறவெல்லாங் கடந்த பொருளை. ஈண்டு, உள்ளிருதி இயவுளென்பதன்கட்போல வினைமுதற்பொருளுணர்த்திக் கடந்த பொருளை யுணர்த்திற்று' என்றார்.

உள்ளிகுதி விளைமுதற் பொருளே யன்றிக் கடந்த பொருளையும் உணர்த்துமா?

௪௮. 'இன்பம் இம்மையென ஒன்றும் பயத்தலானும்' என்றார். இன்பம் வீட்டோடு ஏனைய வற்றையும் பயக்கும் என இறையனாரகப் பொருளுரையிற் கூறப்பட்டிருத்தலை நோக்காது இங்ஙனங் கூறிய தென்னோ.

இங்ஙனம்,

தென்கோவை ச. கந்தையபிள்ளை.

---

# நன்மைபெறுவதற்குரிய நுட்பங்கள்.

அதிர்ஷ்டம் ஒருவர்பங்கல்லவாயினும் அதை ஏற்றுக்கொண்டு ஆளும் திறமையுடையோர்க்கல்லது மற்றவர்க்கு அது வாய்க்காது. இந்த நீதியை நினைவில் வைத்துக்கொண்டு நடப்போமானால், வருவது வழித்தங்காது, நமக்கு அதிர்ஷ்டம் வருவதானால் தானே நம்மடியில் செல்வத்தைக்கொண்டு சொரியுமென்றெண்ணி ஒரு முயற்சியுமின்றி உட்கார்ந்திருப்பது முற்றும் புத்தியீனமேயெனத் தெளிவாகும். 'வருந்தியழைத்தாலும் வாராத வாரா, பொருந்துவன போமினென்றாற் போகா' என்றபடி நன்மையோ தீமையோ நமக்கு நேரவேண்டியகாலத்தில் நேர்ந்துதான் தீருமென்று எண்ணிச்செயலற்றுச் சும்மாவிருப்பது சரியன்று. அப்படி எண்ணியிருப்பவர்களைக் காரியசித்தியென்னப்பட்டது ஒருபோதும் கண்ணெடுத்துப்பாராது. எல்லாம் அவரவருடைய அதிர்ஷ்டப்படியே நடப்பவையென்றாலும், மனிதருடைய முயற்சியின்றி ஒரு காரியமும் நிறைவேறாது.

ஜயம் பெறவேண்டுமென்று ஊக்கங்கொண்டவர்கட்கு இடையூறுசெய்வது ஒன்றுமில்லை. எந்த விதத்திலாயினும் ஆரம்பித்த கருமத்தை முடித்தே தீரவேண்டுமென்ற மனவுறுதிகொண்டு விடா முயற்சியாய்ப் பாடுபடுவோமானால், அப்போது நாம் எதிர் பாராதவிடங்களிலேகூட நமக்கு அநேகம் உதவிகள் நேர்ந்துகொண்டேயி

ருக்கக்காண்போம். நம்முயற்சிகளெல்லாம் கைகூடாமல் நிராசை யாகிய பெருங்கடலில் நாம் மூழ்கும்படி நேருகிற தருணத்தில் கருணைக்கடலான கடவுள் நமக்கு மறுபடியும் ஆசைகாட்டிக் கைகொடுப்பார். இதற்கு ஒரு திருஷ்டாந்தம் உண்டு: வித்தியாப்பியாசமே தனக்குத் தொழிலாகக்கொண்ட ஒரு வாலிபன் தன் உயிரையே ஒழித்துவிட வேண்டுமென்று தீர்மானங்கொண்டு தெருக்கள் தோறும் திரிந்துகொண்டிருந்தான். ஏனெனில் அவன் பலவிதமாகக் கஷ்ட நஷ்டங்களை அநுபவித்தும் விடாமுயற்சியாய் அவைகளை எதிர்த்துக்கொண்டு வெகு காலம் மன்றாடினான்; சிறிதும் பயன்படவில்லை. காரியம் ஒருதடவையும் கைகூடாமற் போனதுபற்றி இப்படி உயிர் வைத்திருப்பதைவிட விட்டுவிடுவதே மேலென நிச்சயிக்கலானான். இவ்விதமான மனவிசாரத்தோடு அவன் மெல்லமெல்ல ஆற்றங்கரைக்குப் போகையில் நடுவழியே பெருமழை பொழியலாயிற்று. அது கண்டு ஏதோ ஞாபகப்பிசகாய் அவன் மழை நிற்கட்டுமென்று அங்கிருந்த ஒரு மண்டபத்திலே போய்த் தங்கினான். அவனைப்போலவே மழைக்கொதுங்கவந்த மற்றொருவன் அம்மண்டபத்தில் அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்தான். அவர்கள் இருவருமாய் அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கையில், அவர்கள் தலைக்குநேராய் அம்மண்டபத்தின் மேற்கட்டடம் இடிந்து அங்கு உட்கார்ந்திருந்த இரண்டாவது மனிதன்மேல் விழ அவன் இறந்துபோனான். தன் உயிரைத்தானே ஒழித்துவிடவேண்டுமென்று போன வாலிபனுக்குச் சிறிதும் அபாயமில்லை. அந்த ஆபத்தினின்றும் சுவாமி தன்னைக் காத்தருளினது கண்டு, தன்னிடத்தில் கடவுள் கடாக்ஷம் வைக்கவில்லையென்று நினைத்தது அவரை வெறுத்தது தன்னுடைய தெரியாமையேயென அவனுக்கு உடனே தோன்றியது. அண்டையிலிருந்தவன் தலையில் இடி விழுந்திருக்கத் தனக்கு மாத்திரம் ஒரு கெடுதியும் நேரிடாமற் காத்தருளின கடவுள் தன்னை ஒருபோதும் கைவிடார் என்ற நம்பிக்கையும் தைரியமும் அடைந்தவனாகி, அவன் இனி நாம் ஒருகாலும் முயற்சியைக் கைவிடாமற் காரியசித்திபெறப் பாடுபடவேண்டும் என்று தீர்மானங்கொண்டு சந்தோஷமாகவே வீட்டுக்குச் சென்றான். பின்பு அவன் தன் ஆயுளளவும் ஒரு குறையுமில்லாமற் பெருமையாகவே வாழ்ந்திருந்தான்.

"கூற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்றபடி சாதாரணமான சமயமாயினும் ஒன்று தனக்கு எப்போது வாய்க்கப்போகிறதென்று எதிர்பார்த்திருந்து, நேருகிற தருணங்கண்டு விடாமல் அதைக் கைக்கொள்ளவேண்டும். அற்பமானவையென்று அவற்றைத் தள்ளிவிட்டுப் பெருத்த வியாபாரங்களே தமக்குக் கிடைக்கவேண்டும் என்று எதிர்பார்த்திருக்கலாகாது. ஏனெனில், அப்படிப்பட்ட தருணம் ஒருகாலும் வாய்க்காமலே போனாலும் போய்விடும். இதற்கும் ஒரு திருஷ்டாந்தமுண்டு: வாலிபன் ஒருவன் ஒரு வித்தியாசாலையில் வேதனமில்லாமற் சேர்ந்து படிக்கவேண்டுமென்று ஆவல்கொண்டு அதற்காகக் காலால் நடந்து நெடுங்காததூரம் சுற்றி வருந்தினான். கடைசியில் தான் குறித்த ஒரு வித்தியாசாலைபோய்ச் சேர்ந்து அவ்வித்தியாசாலைத் தலைவருடன் தன் கதைகளையெல்லாம் எடுத்துரைத்துத் தன்னை ஒரு தர்ம வித்தியார்த்தியாகச் சேர்த்துக்கொள்ளும்படி வேண்டிக்கேட்டான். அந்தப் பாடசாலையில் இருக்கவேண்டிய தர்ம வித்தியார்த்திகளின் தொகை சரியாய் முன்னமே நிறைந்திருந்தது. அதிகமாக ஒருவரைக்கூடச் சேர்த்துக்கொள்ள இடமில்லை. வித்தியாசாலைத்தலைவர் அச்செய்தியை வாயால் வெளிப்படையாகச் சொல்லத் துணியாமல், ஒரு பாத்திரத்தில் வழியவழியத் தண்ணீர் ஊற்றி வித்தியார்த்தியின் எதிரே காட்டினார். அச்சிறுவன் அதைக்கண்டவுடனே அக்குறிப்பின் கருத்தைத் தெளிவாய்த் தெரிந்துகொண்டு அதன்மேல் ஒன்றும் விடைசொல்லத் தோன்றாமல் துக்கப்பட்டுக்கொண்டே திரும்பிப்போயினான். ஆயினும் சிறிதுதூரம் போகையில் அவனுடைய முகத்தில் ஒருவிகாஸம் தோன்றியது. உடனே குனிந்து தரையிலிருந்த உலர்ந்த சருகு ஒன்றைக் கையில் எடுத்துக்கொண்டு மறுபடியும் அவ்வித்தியாசாலைத் தலைவரிடம் சென்று அந்தச் சருகை அவர் வைத்திருந்த பாத்திரத்துத் தண்ணீரிலே போட்டான். இந்த விசேஷச் செய்கையே அவனுடைய அதிர்ஷ்டகாலத்துக்கு ஏதுவாயிற்று. உடனே அவனை அந்த வித்தியாசாலையில் சேர்த்துக்கொண்டார்கள். இதனால், எவ்வளவு கொடிய விரோதமாகத் தோன்றினும், விடாமுயற்சியாய்ப் பாடுபடுகிறவர்களுடைய காரியங்களுக்கு எதுவும் இடையூறு செய்யாதென்பது தெளிவாகின்றது. மனிதர்கள் இறுவரைகாறும் மனஞ்சோராது மு

பல்வகைக் காணும்போதுதான் கடவுளுக்கு அவர்களிடத்திற் கருணை அதிகமாய் உண்டாகின்றது.

காலத்தின் பெருமையைத் தக்கபடி கொண்டாடுவதும் நன்மை பெறுவதற்குரிய நுட்பங்களுள் ஒன்றும். சிலகாலம் கழிந்த பிறகு சென்ற காலத்தைத் திரும்பிப்பார்த்து நமது காலம் நன்றாகக் கழிந்ததென்று களிப்படைய விரும்புகிறவர்கள், தற்காலத்திலுள்ள ஒவ்வொரு நிமிஷத்தின் பெருமையையும் நன்றாகக் கண்டறிந்து, அவ்விதமான நிமிஷத்தில் சிறிதளவுகூட வீண்போகாமல் முற்றும் நல் விஷயத்திலேயே வினியோகிக்கும்படி முயலவேண்டும். போனநிமிஷம் பின்பு பல்லாண்டு தவமிருந்தாலும் திரும்பிவாராது. இருப்புப்பாதை வண்டியேறப்போகிறவன் உசிதகாலத்துக்கு ஒரு நிமிஷம் தவறிப்போவானாயின், போனது போனதுதான். ஒருவர்க்காயினும் காலம் காத்திராது. ஆதலால் நாம் ஒவ்வொரு நிமிஷத்தின் வரவையும் எதிர்பார்த்திருந்து அதனால் உண்டாகும் நன்மையைப்பெறக் கண்ணும் கருத்துமாயிருக்கவேண்டும். தாங்கள் சிந்தனைகொள்ளும்போது மனிதர்கள் அநேகமாய், ஒழிவிருந்தால், இதையும் செய்யலாம் அதையும் செய்யலாம் என்று சொல்வதுண்டு. ஒழிவுகாலத்தை வருந்தித் தேடிக் கண்டுபிடிக்க முயல்கிறவர்களுக்கல்லது மற்றவர்களுக்கு ஒருபோதும் ஒழிவு அகப்படாது. ஒரு வியாபாரத்தைச் செய்ய ஒழிவுகாலம் கண்டுபிடிக்கவேண்டுமென்ற அவசியமாவது ஆசையாவது இல்லாவிடின், தாங்கள் பராமுகமாயிருந்த எந்த விஷயத்துக்கும் மனிதர்கள் வேண்டியபடி சாக்குப் போக்குகள் தேடிச் சொல்லித் தங்களிடத்தில் குற்றமில்லையென்று மெய்ப்பிக்கமாட்டுவார்கள்.

உலகவியாபாரத்தில் புகும்போதே சிலர்க்கு அவர்கள் ஈடேறுவதற்கு வேண்டிய உதவிகளும் ஏதுக்களுமாகிய எல்லாம் இயற்கையாகவே அமைந்திருக்கின்றன. மிக்க வல்லவர்களாய் நன்னெறி பயிற்றுவிப்பதிலேயே நோக்கங்கொண்ட நேசர்கள் அநேகர் அவர்களைச் சூழ்ந்திருக்கின்றனர். இன்னும் அவர்கள் ஈடேறுவதற்கு வேண்டிய இதரமான உபபத்திகளும் சேர்ந்து, இவர்களுக்குக் காரிய சித்தி உள்ளங்கை நெல்லிக்கனிபோலவேயென விசதப்படுத்துகின்

றன. இவ்வளவிருந்தும் கடைசியில் அநேகர் ஆரம்பத்தில் நின்ற நிலையிலேயே நிற்கின்றனர். அல்லது அவர்கள் சொல்லுகின்றபடியே தங்கள் துரதிர்ஷ்டத்தால் தங்களுக்கிருந்த நன்மைக்கு வித்தான நல்லாதரவுகள் அத்தனையும் நழுவவிட்டுப் பிறர் கைப்பிச்சையையே எதிர்பார்க்கும்படியான நிலைமைக்கு வந்துவிடுகின்றனர். இவ்வளவுக்கும் மேற்பார்வையாய்ப் பார்க்கும்போது அவர்களிடத்தில் எள்ளளவும் இழுக்குத் தோன்றாது. வீண் ஆடம்பரங்களில் அழித்துவிட்டானென்பதுமில்லை; வெளிக்கு வேலையை உபேக்ஷை செய்தானென்பதுமில்லை, முதலில் பார்க்கும்போது இவ்விஷயம் மிகப் புதுமையாகவே தோன்றும். ஆயினும் இரண்டொரு நிமிஷம் நிதானித்து யோசிப்போமாயின், அதிர்ஷ்டமானது வேண்டிக் கொடுக்கவந்த நன்கொடையை வாங்கிக்கொள்ளத்தக்கஉயர்ந்ததன்மை அவனிடத்தில் இல்லையெனவும், காலத்தின் பெருமையினிடத்தில் மதிப்பில்லையெனவும், வரவேண்டிய பாக்கியம் உண்டானால் தானேவரும் என்ற மூடநினைவே மேலாயிருக்கின்றதெனவும் தெளிவாகும்.

நன்மைபெறுவதற்குரிய நுட்பங்களுள் முக்கியமான மற்றொன்றாவது, நம்முடைய திறமையில் நாம் உறுதியான நம்பிக்கையுடையவர்களாயிருப்பதாம். நம்மை நாமே நம்பாமற்போவோமானால் அன்னியர்கள் நம்மிடத்தில் எப்படி நம்பிக்கை கொள்வார்கள்? தேர்ச்சி பெறுவதற்குரிய துணைக்கருவிகள் யாவும் ஒருவனுக்கு ஏற்றவண்ணம் அமைந்திருந்தும், தன் திறமையினிடத்திலேயே தனக்கு நம்பிக்கையில்லாமைபற்றி, ஆயுள் முழுதும் பிறந்தவடிவாயே இருப்பவர் அநேகர் உண்டு. மிகுந்த கூச்சமுடையவர்களும் வெளியே வந்து தங்கள் திறமையைக் காட்டவேண்டிய சமயங்களில் தைரியமில்லாமைபற்றி ஒன்றும் செய்யத்துணியாமற் சும்மா இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்குத் தங்களிடத்தில் நம்பிக்கையில்லாமை வரவர அதிகமாகிக் கடைசியில் ஒன்றுக்கும் உதவாதவர்களாகி விடுகிறார்கள்.

"தேடாதழிக்கிற் பாடாமுடியும்" என்பது மற்றொரு நுட்பமான நீதியாம். இந்த நீதியின் பெருமை நன்றாய்த் தெரிந்திருந்தா

லும் அநேகர் அதை உபேக்ஷைசெய்து வரவுக்குமிஞ்சின செலவு செய்ய ஆரம்பிக்கிறார்கள். கையிலுள்ள கருந்தனத்தை யுக்தாயுக்த விவேகமின்றி வீண்செலவு செய்வதைப்பார்க்கிலும் பெரும்பிழை வேறில்லை. செலவுசெய்ய அவசியமில்லாத விஷயத்தில் ஒரு காசு கூடச் செலவழிக்கலாகாது; செலவுசெய்ய நல்ல தருணம் வாய்த்த போது அதற்கும் மயங்கலாகாது என்று ஒருவர் சொல்லுகிறார் ஆதலால் எல்லோரும் இதை மனதில்வைத்து ஏற்றவண்ணம் உசித மாக மிதச்செலவு செய்துகொண்டுவருவதே முதன்மையான கடமையாம்.

நன்மைபெறுவதற்கு உரிய மற்றொரு நுட்பமாவது ஏற்றகுண மமைந்த இல்லாளைப் பெற்றிருப்பதாம்.

"இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதென்
இல்லவண் மாணாக் கடை" எனவும்,
"மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினு மில்" எனவும்,
"இல்லா ளகத்திருக்க வில்லாத தொன்றில்லை" எனவும்

சொல்லியிருக்கின்றபடியே இல்லறத்தோர்க்குரிய எல்லா நன்மைகளும் இல்லாளைப்பற்றியே வருவனவாம்; அவ்வில்லாளும் குடித்தனத்தைச் செட்டுஞ்சீருமாய் நடத்திவரத்தக்க திறமையும் நற்குண நற்செய்கையும் உடையவளாயிருக்க வேண்டும். அப்படி யின்றிக் கெட்டகுணங்கள் உடையவளாயிருப்பாளாயின், "அவ்வில் புலி கிடந்த தூறாய்விடும்" என்றபடி அவளாற் குடித்தனமே கெட்டுப் போமாதலால் அப்படிப்பட்ட மனையாள் இருப்பதைவிட இன்மையே மேலெனத் தோன்றும். ஆனதுபற்றி முதலில் ஒரு பெண்ணை மனையாளாகக் கொள்ளும்போதே அப்பெண் பிறந்த குடிப்பெருமையையும் பெற்றோர்களுடைய குறை குணங்களையும் பார்த்தே கொள்ளவேண்டும். தாயைப்பார்த்து மகளைக்கொள் என்கிறார்களல்லவா? ஆதலால் இவ்விஷயத்தில் எல்லோரும் அதிக கவனமாயிருக்கவேண்டும். முதலில் ஆலோசியாமல் பொல்லாத குணமுடைய பெண்ணைப் பெண்டாகக் கொள்வோமாயின், "தூற்றும் பெண்டிர் கூற்றெனத்தகும்" என்றபடி பெருந்துன்பமுண்டாக்கி வதைக்கத்தக்க கூற்று அந்தப்பெண்ணைவிட வேறு வேண்டுவதில்லையாம்.

பெண்சாதி கெட்டால் புருஷனும் கெட்டான் என்றும் சொல்லுகிறார்கள்.

புருஷனுக்கு எல்லாப் பெருமைகளும் மனைவியின் வழியாயே விளையவேண்டுமாதலால், தாதிபோலக் கணவனுக்குப் பாதப் பணிவிடை செய்பவளும், அமைச்சன்போல் உசிதமறிந்து யுக்தியாலோசனைகள் உரைப்பவளும், கணவன் ஒருவேளை கோபித்துக் கடும் பேச்சுப் பேசினாலும் அதையும் அவர் அனுக்கிரகம் போலக்கொண்டு குளிர்ந்து பேசத்தக்க பொறுமையுடையவளும், தாய்க்குப் பின் தாரம் என்றபடி புருஷனை இனிய உணவு முதலியவைகளால் உபசரித்துத் தாயைப்போலப் பாதுகாப்பவளும், கணவன் மனவிசாரமுற்றிருக்கும் காலங்களில் இனிய வார்த்தைகள் சொல்லித் தேற்றுகிறவளும், இன்னும் பலவகைகளால் எவ்விதத்திலும் எக்காலத்திலும் தன் காதலனுக்குக் களிப்பே உண்டாக்கும் உத்தமகுணங்கள் உள்ளவளுமான அகமுடையாளைப் பெற்றிருப்பவனுடைய பாக்கிய மல்லவோ பாக்கியம்!

நன்மைபெறுவதற்குரிய நுட்பங்கள் இவ்வளவு மாத்திரமேயல்ல, இன்னுமொன்றுண்டு: தங்களுக்கு எக்காலத்திலும் ஒரு குறைவுமின்றிக் களிப்பும் சிரிப்புமாய்ச் சிறப்பாக வாழ்வதற்கு வேண்டிய நிறைசெல்வமுள்ளவர்கள் அநேகர் இருக்கின்றனர். ஆயினும் அவர்களுட் பலர் சற்றுப் புன்னகைகொள்ளச் சிறுபொழுது கூட ஒழிவில்லாமல் மேன்மேலும் திரவியம் சம்பாதிக்கவேண்டுமென்ற ஆவலே அதிகமாகி எப்போதும் உழைத்தவண்ணமாய் இருக்கின்றனர். "முயற்சி திருவினையாக்கும்" என்பதே அவர்களுடைய முதன்மையான கொள்கை. அக்கொள்கை எல்லோருக்கும் இருக்கவேண்டுவது நியாயமே. ஆயின் செல்வமே மனிதர்களுக்குச் சௌக்கியமும் களிப்புமுண்டாக்க முதற்காரணமன்று என்பதை அவர்கள் ஒருபோதும் எண்ணுவதில்லைபோலும். தரித்திரத்தினல் எவ்வளவு துக்கமுண்டோ, அதைப்பார்க்கப் பதின்மடங்கு துக்கமும் செல்வத்தினல் சம்பவிக்கக் கூடும். முதலில் செல்வம் தேடுவது துக்கமே, தேடினதைக் காப்பதும் துக்கமே, அதைத் தான் செலவழிப்பதும் துக்கமே, கைசோர்ந்துபோனாலும் துக்க

மே. ஆதலின் அக்கிரமமாய்ப் பொருள்தேடி அவதிப்படுவதைப் பார்க்கிலும் தரித்திரத்தோடாயினும் உள்ளதைக்கொண்டு திருப்தியடைந்திருப்பது உத்தமமாம்.

ஆயின் ஒருவனுக்கு உயர்ந்த பதவிகிடைத்தால் அவன் இவ்வுலகவாழ்க்கையில் ஜயம்பெற்றவனு அல்லவா? எளியார்க் கெளியனுயிருந்து நல்வழியிலேயே பொருள்தேடித் தனவானுனவனும், பேரூர் தெரியாதிருந்து மிகப் பிரசித்திபெற்றவனும் ஜயம்பெற்றவர்களா அல்லவா என்பீர்களோ? கடவுள் இவ்வுலகத்தில் நமக்கு அளித்திருக்கும் பெருங்கொடைகள் பலவற்றுள்ளும் முதன்மையான திருப்தியென்பது ஒன்று இல்லாவிடின் அவர்களும் ஜயம்பெருதவர்களே யாவர். ஒருவன்கீழ் ஆட்பட்டிராமல் யோக்கியனுகக் காலம் கழிப்பதற்கு வேண்டிய வழியைத் தேடிக்கொள்வதே முக்கியமாதலால் நமக்குப் பொருள் விசேஷமாகக் கிடைக்காமற்போனுலும், "செல்வமில்லாமற்போனுலும் சந்தோஷமடைந்திருக்கக் கூடும்; அதிர்ஷ்டமானது செல்வத்தைச் சேரவொட்டாமல் விலக்கினுலும், சந்தோஷத்தை ஒருபோதும் விலக்கமாட்டாது" என்பதை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு, "தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை, அம்மா பெரிதென் றகமகிழ்க" என்றபடி எப்போதும் அகமகிழ்ந்துகொண்டே இருக்கக்கடவோம். அப்படி உள்ளதைக்கொண்டு திருப்தியடைந்து சந்தோஷமாய்ச் சோம்பலின்றி முயற்சிசெய்துகொண்டிருப்பவர்களுக்கு எப்போதும் எவ்விதமான குறைவும் உண்டாவதில்லை.

"ஜனவிநோதினி"

# இராமாவதாரச்செய்யுட்பாடாந்தரம்.

## ஊர்தேடுபடலம்.

வேரியு மடங்கின நெடுங்கடல் விளம்பும்
பாரியு மடங்கின நடங்கியது பாடல்
காரிய மடங்கினர்கள் கம்மியர்கண் மும்மைத்
தூரிய மடங்கின தொடங்கிய துறக்கம்.

என்னும் ௬௫௮-ம் செய்யுளில், 'வேரியுமடங்கின நெடுங்கடல் விளம்பும்—பாரியுமடங்கினது' என்பது 'வேரியு மடங்கின நெடுங் களிவிளைக்கும்—பாரியுமடங்கினது' எனக்காணப்படுகின்றது. வேரியுமடங்கின தெனக் கூறினதற்கியைய அதன்களிப்பாலுண்டாகும் பலவார்த்தைகளுமடங்கின தெனக் கூறல் சிறப்புடைமையின் பின்னையதே பொருத்தமுடைத்து. பாரி என்பது பரக்கக்கூறும் வார்த்தை என்னும் பொருளை உணர்த்திநின்றது. இச்செய்யுளின் மூன்றாமடி 'காரியமடங்கியது காலமுணர்கன்னல்' எனவும் பாடம்.

வேறு

இளக்கரிழு தெஞ்சவரு மெண்ணரு விளக்கைத்
துளக்கியது தென்றல்பகை சோரவுயர் வோரி
னளக்கரொ டளக்கரிய வாசையுற வீசா
விளக்கினம் விளக்குமணி மெய்யுறு விளக்கம்.

என்னும் ௧௬௪-ம் செய்யுளில், 'துளக்கியது தென்றல் பகை சோரவுயர்வோரி—னளக்கரொ டளக்கரிய வாசையுற வீசா—விளக்கினம் விளக்குமணி மெய்யுறுவிளக்கம்' என்பது 'துளக்கியது தென்றல்பகை சோரவுயர் வோரி—னளக்கரொடளக்கரிய வாசைவளி வீச—விளக்கொளி யெனச் சுழல்வ மெல்லியர்கண்மேனி' எனக்காணப்படுகின்றது. தென்றல் விளக்கைச் சுழற்றி அவித்து விட்டது. அங்ஙனம் அத்தென்றல் வீசலால் விளக்கொளி சுழன்று அவிதல் போல மெல்லியர்கண் மேனியொளியும் ஆசையாகிய காற்று வீசச் சுழன்று கெடுவது என்னும் பொருடந்து சிறந்து நிற்றலாற் பின்னையதே சிறப்புடைத்து. இன்னும் இஃது 'ஆசையுற வீசா—விளக்கென விளங்குமணி மெய்யுறு விளக்கம்' எனவும் காணப்படுகின்றது. மெய்யுறுவிளக்கம்—சரீரகாந்தி.

ஷை

இனைய தன்மை யியக்கிய ரெய்திய
மனையொ ராயிர மாயிர கோடியா
மனைய வன்குலத் தாயிழை யாரிட
நினைவி னெய்தின ளீதியி னெய்தினன்.

என்னும் களகூ-ம் செய்யுளில், 'மனையொ ராயிரவாயிர கோடியாம்' என்பது "மனையொராயிர கோடிமற்றுங்க கன்று' எனக்காணப்படுகின்றது. அகன்று எனவருதல் பொருத்தமுடைமையிற் பின்னையதே பொருத்தமுடைத்து. பின்னர்க் கூறப்படும் மாதர்தொகை ஒவ்வொன்றிலும் கோடி என்னும் தொகை காணப்படுதலின் இதினு மங்ஙனம் வருதலே சிறப்புடைமையின் 'ஆயிரமாயிரம் வாயில்போய்' என்பது பொருத்தமின்றுதல் காண்க.

ஷை

இத்திறத் தரக்கிமார்க ளீரிரு கோடி யீட்டப்
பத்திய ருறையுந் தெய்வப் படர்நெடுந் தெருவும் பார்த்தான்
சித்திய ருறையு மாடத் தெருவும்பின் னுகச் சென்று
னுத்திசை விஞ்சை மாத ருறையுளை முறையி னுற்றுன்.

என்னும் ககூக—ம் செய்யுளில், 'இத்திறத்தரக்கி மார்களீரிரு கோடி யீட்டப்—பத்தியருறையுந் தெய்வப் படர்நெடுந் தெருவும் பார்த்தான் - சித்திய ருறையுமாடத் தெருவும்பின்னுகச்சென்றுன்' என்பது, 'இத்திறத் தரக்கி மாரீண் டிராயிர கோடி யீட்டப், பத்தியைக் கடந்து பின்னும், பத்துநா றுனகோடிச் சித்தியர் தெய்வ மாதர் தெருவும் பின்னுகச் சென்றுன்' எனக்காணப்படுகின்றது. சித்தியர்க்குந் தொகை கூறப்படுதலின் பின்னையதே பொருத்தமுடைத்து.

ஷை

எற்பு வான்றொடர் யாக்கையாற் பெறும்பய னிகந்தன னிதுநிற்க
அற்பு வான்றளை யிற்பிறப் பதனொடு மிகழ்ந்துதன் னருந் தெய்வக்
கற்பு நீங்கிய கனங்குழை யிவளொனிற் காகுத்தன் புகழோடும்
பொற்பும் யானுமிவ் விலங்கையு மாக்கரும் பொன்றுது மின்றென்றுன்

என்னும் உ00—ம் செய்யுளில், 'அற்புவான்றளை யிற்பிறப்பதனொடு மிகழ்ந்து தன்னருந் தெய்வக்—கற்பு நீங்கிய கனங்குழை யிவளொனிற் காகுத்தன் புகழோடும்—பொற்பும் யானுமிவ் விலங்

கையும்' என்பது "அற்பிறேங்கிய வறப்பயன் முழுவது மழிந்து மற்றநங்தெய்வக்—கற்புநீங்கினள் கனங்குழை யென்றிடிற் காகுத் தன் புகழ்யாணிப்—பொற்பிறேங்கிய விலங்கையும்" எனக்காணப் படுகின்றது. "நீங்கிய கனங்குழை" என்பது பொருத்தமின்மையிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

௯௰

நூற்பெருங்கட ணுணங்கிய கேள்விய னேக்கின வியனென்றுள்
வேற்பெருங்கடல் புடைபரந் தீண்டிய வெள்ளிடை வியன்கோயிற்
பாற்பெருங்கடற் பன்மணிப் படப்புடைப் பஃறிரைப் படர்வேலை
மாற்பெ ருங்கடல் வதிந்ததே யனையதோர் வளப்பினன் றுயில்வாளை.

என்னும் உாகூ—ம் செய்யுளில், 'இயனென்றுள் —வேற்பெருங்கடல் புடைபரந்தீண்டிய வெள்ளிடை வியன் கோயிற்—பாற்பெருங்கடற் பன்பணிப் பரப்புடைப் பஃறிரைப் படர்வேலை-மாற்பெருங்கடல் வதிந்ததே யனையதோர் வளப்பினன் றுயில்வாளை' என்பது 'மறங்கூரும்-வேற்பெரும்படைபுடைபரந் தீண்டுற விளங்கிய வியன் கோயிற்-பாற்பெருங்கடற் பன்மணிப் பஃறலைப் பாம்பணையதன்மீது—மாற்பெருங்கடல் வதிந்ததே யனையதோர் வளப்பினன் றுயில்வாளை' எனக்காணப்படுகின்றது. இராவணன் றுயிற்கு நாராயணன் றுயிலை உவமை கூறலாண்டுச் சிறப்புடைத்தாதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து. இராவணன் சீதைபாற் கொண்ட மோகத்தாற் பொய்யுறக் குறங்குவோனாதலிற் றுயிலானும், நிறத்தானும், பெருமையானும் பாற்பெருங்கடலை யொத்தான் என்க. சீதையிற் கொண்ட மோகத்தாற் பொய்யுறக்குறங்குவா னென்பதை "தேவியனையாளிற் சிந்தை மெய்த்திருவினைகப்-பூவியலமளி மேலாப்பொய்யுறக் குறங்குவானை" என்னும் உகங-ம் செய்யுளானறிக. பாற்கடல் வெள்ளிவெண்சேக்கைக்கும் (உகக-ம் செய்யுள்) பாம்பணை பூவியலமளிக்கும் (உகங-ம் செய்யுள்) உவமை என்க. வெள்ளி வெண் சேக்கை—வெள்ளியாலாகிய வெண்மையான படுக்கை—என்றது மஞ்சத்தை. அமளி-மெத்தை.

(தொடரும்)

இங்ஙனம்,
சி. கணேசையர்,

# "நுண்பொருண்மாலை."

(முற்றொடர்ச்சி.)

## ௭-ம் அதி. புதல்வரைப் பெறுதல்.

௬௧. "பெறுமவற்றுள்...............றல்லபிற"

நு - லை:—அறிவது என்பது அறிதல் எனத்தொழிற்பெயராய் நின்றது; "உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல்" (திருக்-௧0௭௯) என்பதும் அது. ஈண்டு இவ்வாறுரைத்தது பிற என்னும் பன்மையைப் பரிகரித்ததென்க. "வழுவாவியல்" என்னுங் கோவையாருள் (௧௪௨) "குழாங்களெல்லாம்.........நிற்பதாவது" என்பது மது. இனிப்பெரும்பாலுந் துவ்வீறு வினைமுதற்பொருட்டாய் வருவது வந்தவழிக்காண்க. "நுண்ணறி வுடையோர் நூலொடு பழகினும், பெண்ணறி வென்பது பெரும்பே தைமைத்தே" "சான்றோனெனக்கேட்ட தாய்" (திருக்-௬௯) என்பவற்றால், "அறிவறிந்த" என்பது பெண்ணொழி மிகுசொல். "ஊரவர் கௌவை எருவாக" (திருக்-௧௧௪௭) என்பது ஆணொழிமிகுசொல். அறிவறியும் மக்களென்னாது, அறிதலுரிமை ஆண்மைக்கே சிறந்ததாகலின் காரணமாகிய உரிமை காரியமாகிய அறிதலைப் பயந்தேவிடுமாதலால், அத்துணிவுபற்றி "அறிந்த" என இறந்தகாலத்தாற் கூறினார். "போதுகுலாய.........மாதுகுலாய மென்னோக்கி சென்றார்." என்னுங் கோவையாருள் (௩௧௫) செல்வாரென்பதனைச் 'சென்றார்' என்றதும், "தலைப்பட்டார் தீரத்துறந்தார்" (திருக்குறள்-௩௪௮) என்பதும், "விழுமணிப் பூணினானை வீற்றிரீஇ விதியிற் சொன்னான்" என்னுஞ் சிந்தாமணியும் (முத்தியிலம்பகம்-௩0௭) அது.

௬௨. "எழுபிறப்புந் தீயவை.........மக்கட்பெறின்."

நு - லை:—தானந்தவங்களைச் செய்யுமக்களென்னாது தவத்தின் காரணமான பண்புடைமக்கள் என்றதனால் காரணப்பெயர் காரியத்தின்கணின்றது.

௬௩. "தம்பொருளென்ப.........வினையான் வரும்."

நு - லை:—தந்தம்வினை என்புழித் தொக்குநின்ற ஆறும்வேற்றுமை உரிமைப்பொருட்கண் வந்தது, ஆறுவதன் சூத்திரத்துள், "இயற்கையினுடைமையின் முறைமையிற் கிழமையின்" (தொல்-சொல்- ௮0) என்னுங் கிழமைக்கிழமை என்க. இதற்கு நச்சினார்க்கினியர் நிலம் பொருள் காலம் மூன்றனையும் பற்றிவருமென்று முருகனது குறிஞ்சி, வெள்ளியதாட்சி, காட்டதுயானை எனக்காட்டினார். அஃதன்றியும் ஈண்டு வினையும் கிழமைக்கிழமையாயிற்று. அடிப்பாடு காரணமாகத் தந்தம் என விகாரமாயிற்று. அடிப்பாட்டினைத் தொடை நோக்கி யென்பர் இவ்வுரையாசிரியர்.* பதிற்றுப்பத்தினுள், "குவியற்கண்ணி" (மூன்றும்பத்து-க) என்னுந் தொடை நோக்கி"மிதியற் செருப்பிற் பூழியர் கோவே" என வலிந்துநின்றது என்ற உரையாலும் அறிக.

௬௪. "அமிழ்தினுமாற்ற........யளாவியகூழ்."

நு - லை:—இனிது இனிமையையுடைத்து என வினைக்குறிப்புச் சொல்லாயிற்று. "இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும் - நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தல்" என்பது பாட்டுக்குறை (புறம் க௮௮.) இவ்வுரையாசிரியர் பழைய பாட்டினையே வாசகமாக்குவர்.

௬௫. "மக்கண்மெய்தீண்டல்........செவிக்கு."

நு - லை:—மற்று - வினைமாற்று. தீண்டல் கேட்டல் காரணமாப்பிறக்கும் இன்பமென்னாது அவற்றையே இன்பமென்றதனால், காரணப்பெயர் காரியத்தின்மேனின்றது. இவ்வாறு வருவனவற்றிற்கெல்லாம் இதனைக்கொண்டே பொருளாக்குக.†

௬௬. "குழலினிதியாழினி........கேளாதவர்."

நு - லை:—கேளாதவரெனவே கேட்டவர் மழலையே இனிதென்பரென்பது தோன்றுதலானது குறிப்பெச்சம்.

௬௯. "ஈன்றபொழுதிற்........கேட்டதாய்."

---

* ௩௫௨, ௫௨௨, ௫௨௪, ௧0௫௮-ஆம் திருக்குறளுரைகளைக் காண்க.

† ௨௮௭, ௩௫௮, ௪௭௪, ௪௮௭, ௬௨௫, ௧௩௧௧, ௬௪௪, ௮0௧, ௬௨, ௬௫, ௧௬௨-முதலிய திருக்குறளுரைகளிற் காண்க.

நு - லே:—சான்றோன் - கல்விகேள்விகளான் நிறைந்தோன். பெரிது என்பது வினைக்குறிப்புப் பெயராகாது, உரிச்சொல்லாய், மிக எனக் குணத்தின்மேனின்றது.

---

## ௮-ம் அதி. அன்புடைமை.

---

௭௨. "அன்பிலாரெல்லாந்........முரியர் பிறர்க்கு."

நு - லே:—எல்லாமுரியர், என்புமுரியர் என்பவற்றைப்பொருளானும் உடம்பானுமுரியர் என்றதனால், ஆனுருபுகள் செய்யுட்டொடை காரணமாக விகாரத்தாற்றொக்கன. ஆனுருபு ஈண்டு உருபிருந்தாங்கே தொகாமைபற்றி விகாரமென்றார்; இனி உருபிருந்தாங்கே தொகுவது "வாயுணர்வின்மாக்கள்" (திருக்-௪௨௦) என்க. அதனை வாயானுகருஞ் சுவையனையுணரு முணர்வு எனவிரியும் மூன்றும் வேற்றுமைத்தொகையென்றாரல்லது விகாரம் என்றனையும் அறிக. கனலொடுபுகையும் குடையொடுநிழலும்போலச் சில சொல்லுடன் றொக்கது.

௭௩. "அன்போடியைந்த........டியைந்ததொடர்பு"

நு - லே:—என்போடுண்டாகிய என்னும் ஒற்றுமை வினையை வேற்றுமை வினையாக்கியுரைத்ததனால் "இயைந்த என்பது உபசார வழக்கு." இதனை வடநூலார் சையோக சம்பந்த வாசகத்தை சமவாயசம்பந்தத்திற்கு உரைத்ததனால் உபசாரமென்பர். ஒன்றற்குரியன வேறொன்றற்கு வருவன உபசாரம். மேல்வரும் உபசார வழக்கிற்கெல்லாம் இவ்வாறே கொள்க.* இது வடநூற்கருத்து. என்போடியைந்த என்றது தகுதியான்வந்தது. சிந்தாமணி நாமகளிலம்பகத்தில் "கல்லார்மணிப்பூண்" (பதிகம்-௧.) என்னுங்கவியானும் உணர்க. சொல்லதிகாரம் கிளவியாக்கத்தில் "தகுதியும் வழக்கும்" (௧௭) என்னுஞ் சூத்திரவிதியாற்பெறப்பட்டது.

---

* ௩௧௧, ௩௮௧, ௩௮௩—௩௮௫, ௪௮௨, ௨௫௪, ௭௩—முதலிய திருக்குறளுரைகளிற் காண்க.

எஅ. " அன்பகத்தில்லா........மரந்தளிர்த்தற்று."

நு-லை:—வற்றல், பால்விளங்கா அஃறிணைப் படர்க்கைப் பெயர் என்றார்; சாதியொருமை. சாதிப்பெயர் காட்டியதற்கும் "அஞ்சுவதஞ்சாமை" (சஉஅ) என்பதன்கண் அஞ்சுவது என்பதனை சாதியொருமை என்பதற்கும் வேற்றுமை வினவியறிக.

---

## கூ-ம் அதி. விருந்தோம்பல்.

---

அக. "இருந்தோம்பி................செய்தற் பொருட்டு."

நு-லை:—ஓம்பல்-போற்றல். வேளாண்மை - உபகாரம். வாழ்வதெல்லாம் என்பது முழுவது மென்னும் பொருள் படநிற்கும் ஒருசொல். "மயின் மன்னுசாயல்" என்னுங்கோவையாருள் (கூறுக) "சென்றதெல்லாம்" என்பதும் அது. "அழுக்கொண்டதெல்லாமழப்போம்" (கூருகூ) "வினைநலம் வேண்டிய தெல்லாந்தரும்" (கூருக) என்பனவுமது; ஒருமைப் பன்மை மயக்கமுமாம். *

அஉ. "விருந்து புறத்ததாத்.....வேண்டற்பாற்றன்று."

நு-லை:—சாவாமருந்து - சாவாமைக்குக் காரணமாகிய மருந்து; நிலம்பூத்தமரமும் அது. இது காரிய முற்பட்டுக் காரணப்பெயர் கொண்டது. இனி, காரணமுற்பட்டுக் காரியப்பெயர் கொண்டுவரும் பெயரெச்சங்களும் உள; அவை "அழுதகண்ணீர்," (திருக்-ருறுறு) "உறுஅதோவூரறிந்த கௌவை" (ககசஅ) "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்" (கூகூகூ) "பொருநர்த் தேய்த்த போரருவாயில்" (திருமுருகாற்றுப்படை-எகூ) என்பன முதலாயின. வினைத்தொகையுள்ளும் ஆகூழ் போகூழ் (திருக்-கூஎக) நடுக்கலூர், "தெறுபொருளும் வேந்தன் பொருள்" (எறுகூ) என வரும். இதனுள் அர்த்தாந்தரோகங்காண்க. "மலர் மிசை யேகினான்" (கூ) "விருந்து புறத்ததா" (அஉ) "மதிநுட்பநூலோடு" (கூகூகூ) என்ற மூன்றினும்

* இதனால், அழக்கொண்டவெல்லாம், வேண்டியவெல்லாம் என்பன இவர் பாடமாகாமை காண்க.

முறையே பஞ்சாக்கரம், அர்த்தாங்கீகாரம், தூஷணம் காண்க. அர்த்தாங்கீகாரத்தைக் "கவுணம்" என்பாரு முளர்.

அ௫. "வித்துமிடல் வேண்டுங்............மிசைவான் புலம்.

நு-லே. ஓம்பி - ஓம்புவித்து எனச்செய்விப்பார்மேல் நின்றது. உழவினுள் "உழுவார்" (க0௬-உ) என்பதும், முருகாற்றுப்படையுள் "வசிந்து வாங்கு நிமிர்தோள்" (க0௬) என்பதும், சிந்தாமணியுள் "காய்மாண்டதெங்கின்" (நாம-உ) என்னும் பாட்டும் பட்டினப்பாலையுள் "காடு கொன்று நாடாக்கிக் குளந்தொட்டு" (உ அ௩) என்பதும் செய்வதன் மேலுஞ் செய்விப்பதன்மேலும் உரைபெற்றன.

அ௬. "செல்விருந்தோம்பி.........நல்விருந்து வானத்தவர்க்கு."

நு-லே:—வருவிருந்தென்பது இடவழுவமைதி; "செலவினும் வரவினுந் தரவினுங் கொடையினு, நிலைபெறத் தோன்று"(தொல். கிளவியாக்கம்-உஅ) என்னுஞ் சூத்திரவிதி; இஃது இளம்பூரணர் கருத்து. "மாவைவந்தாண்ட" என்னுந் திருக்கோவையாருள் (உ00) வந்தாண்ட - சென்றண்ட என்றார் பேராசிரியரும். இதற்கு நச்சினார்க்கினியர் இடவழுவமைதி என்னாது விதிச்சூத்திரமாக்கினர் எனைக்கொள்க.

அ௯. "உடைமையுளின்மை.........மடவார்கணுண்டு."

நு-லே:—மடவார்-அறிவிலாதார் என ஆண்பாலானது. "தூங்கு சிறைவாவலுறை" என்னுஞ் சிந்தாமணியுள் (காந்தருவ, ௬) மடவாரென்பதும் அது.

---

## க0-ம் அதி. இனியவை கூறல்.

---

௯க. "இன்சொலா னீர.........வாய்ச்சொல்."

நு-லே:—ஈரம் அன்பு. ஆல் அசை; "இரப்பாரை யில்லாயின் (க0௬அ) என்பதில் ஐயும் அசை. இலவாஞ் சொல் என இயையும். தீச்சொற்பயிலா என்பதறிவித்தற்கு வாயென வேண்டாதுகூறி

வேண்டியது முடித்தல் என்னுந் தந்திரவுத்தி காட்டினாரெனக; திருவாய்மொழி என்பதுமது. இதனை வடநூலார் தாற்பரியமென்ப.

௯௩. "முகத்தானமர்ந்........இனிதேயறம்"

நு - லை:—இன்சொலினதே - இன்சொலின் கண்ணதே என்று உரைத்ததனால், நோக்கி என்னும் எச்சம் இன்சொலென அடையெடுத்துநின்ற முதனிலைத்தொழிற் பெயர் கொண்டது. "பேரமர்க்கட்டு"ம் (திருக்-௧௦௮௩) பெயரடியாய்ப் பிறந்த வினை. நச்சினார்க்கினியரும் "ஆயிருமுதலின்" (தொல்-பாயிரம்) என்பதனை 'அவ்விரண்டும் முதலுகையால்' என்றாரெனக.

௯௫. "பணிவுடையனின்சொல........மற்றுப்பிற."

நு-லை:—அல்லபிற என்பது, "மக்கட்பேறல்லபிற" (௬௧) என்பதுபோல எச்சமாகாது முற்றாயிற்று. உடையனாய் என எச்சம் முற்றாயிற்று.

௯௭. "நயனீன்று நன்மை ......சொல்."

நு-லை:—தலைப்பிரிதல் ஒருசொல். "தலைச்சென்றார்க் கூறெடு செய்யுஞ் சிறப்பு" என்ற ஆசாரக்கோவையும் அது.

௧௦௦. "இனியவுளவாக............காய்கவர்ந்தற்று."

நு-லை:—பொருள் விசேடித்த பண்புவமைக்கண்ணும் இனிய கனி இன்னாதகாய் எனச் சென்றது. "மால்வரைக், கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி - அமிழ்துவிளை தீங்கனி யெளவைக் கீந்த...அதிக" னென்னுஞ் சிறுபாணாற்றுப்(௧௦௦-௨) காண்க.

(தொடரும்.)

பத்திராசிரியர்.

---

திருச்சிற்றம்பலம்.

# தமிழ்ப்பழஞ் சரிதம்.

தமிழ்மொழியின் ஆதிவரலாறு முழுவதும் அளந்தறிதல் அருமையான செய்கையாயினும் அம்முழுமங்கலான காலத்தின் நிலையை நாம் ஊகித்தறிதற்குப் பழந்தமிழ் நூல்களும் வேறுசில புறக்கருவிகளும் சிறுசிறு நக்ஷத்திர வொளிபோல விருந்து உதவுகின்றன. மிக்க இருட்சி கொண்ட நள்ளிரவில் சிற்றுடுக்களின் உதவியால் உலகத்துப்பொருள்நிலை எவ்வளவு சிறுபான்மையாக அறியப்படுமோ, அவ்வளவே பழங்கால நிலையைப்பற்றி நாம் அறியக்கிடப்பதும். ஆயினும், அவ்வொளியால் வெளியாகின்றவற்றை அதன் சிறுபான்மைகருதி விட்டொழியாது அவற்றை அறிவதற்கே நம்மனம் பேரவாக்கொண்டு முந்துதல் வழக்கே. மக்களின் இயற்கை நிகழ்ச்சியாகிய இவ்வவா எம்மையுந் தூண்டலால், அவ்விருண்டகால நிலையைப்பற்றி எம்மாராய்ச்சியிற் கண்டவைகளை முதலிற் கூறிப்பின்பு சந்திர சூரிய வொளிகலந்ததுபோன்ற காலநிலையைப்பற்றிப் பேசுவாம்.

தமிழ்மொழியின் மிகப்பழைய காலத்துச்சரித்திரம் அறியவேண்டின் நவீன சாத்திரமாகிய பாஷாதத்துவ நூன்முறை அதற்குரிய கருவிகளில் சிறந்த தொன்றேயாம். அச்சாத்திரமானது, உலகத்து வழங்கும் பலமொழிகளையும் சீர்தூக்கியாராய்ந்து அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளை விளக்கவல்லது. அவற்றால் ஒற்றுமையுடைய மொழிகளை வழங்கும் மக்கள், கணித்தற்காகாக்காலமொன்றில் ஓரிடத்தில் ஒன்றாயிருந்தவரெனவும், வேற்றுமையுடையமொழிகளை வழங்கும் மக்கள் தொடர்பின்றிச் சேய்மையாயவேற்றிடத்தில் வாழ்ந்தவர்கள் எனவும் நாம் அறியலாகும். தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளமென்னும் மொழிகள் இப்போது வெவ்வேறிடத்தில் வெவ்வேறு மக்களால் வழங்கப்படுகின்றனவாயினும் அவையெல்லாம் திராவிடம் என்னும் பொதுப்பெயர்பெற்றுத் தமிழின் சேய்மொழிகளென்று எவ்வாறுவிளங்குகின்ற

தோ, அதுபோலவே, உலகத்து வழங்கும் மொழிகளெல்லாம், ஆரியம், செமிடிக், துரானியம் என்னும் மூன்று பெரும்பிரிவுகளாக ஆராய்ச்சிவல்லுநரால் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் வடமொழி, கிரீக், லாடின் என்பன ஆரியமொழிகளெனவும், ஆரமெயிக், ஹிப்ரூ, அரபி என்பன செமிடிக் மொழிகளெனவும், தமிழ், மங்கோலியம், பின்னியம், போதியம், மலேயம் என்பன துரானியமொழிகளெனவும் கூறப்படும். இவ்வாறு, உலகத்து வழங்கும் பற்பல மொழிகளும் இம்மூன்று பகுப்புள் அடங்குதலால், அம்மொழிகளையுடைய மக்களெல்லாம் ஒருகாலத்தில் மூன்றுபிரிவினராயிருந்து காலாந்தரத்தில் அதினும் பல பிரிவினராயினரென்று பாஷாதத்துவ நூல் விளங்கக்காட்டுகின்றது. அவர்கள் மூன்று வகுப்பினராய் ஒன்றாய் ஓரிடத்திலிருந்து பிரிந்தவரென்னுங் கொள்கையை மானுடவிகற்பநூலு (எத்னோலஜி) ம் பிறவும் ஆதரிக்கின்றன என்பர்.

இனி இம்முப்பிரிவுள், நம் தமிழ் துரானியப்பகுப்பைச் சார்ந்துள்ளது. தமிழில் வழங்கும் நீ, நான், யாம், பெண் முதலாய பல மொழிகளும் முகரப்பிரயோகமும் சீன மொழிகளில் வழங்குவனவென்றும், ஆஸ்திரேலியாவின் பழங்குடிகள் வழங்குந் துரானியபாஷை, தமிழோடு ஒருவாறு ஒற்றுமைகொண்டுள்ள தென்றும் சொல்லப்படுகின்றன. *ஆஸ்திரேலிய திராவிட பாஷைகளின் ஒற்றுமை முதலியவற்றைக் கண்டெழுதினவர் "நாரிஸ்" என்னும் பண்டிதர் ஆவர். அன்றியும் உடற்கூற்று வண்ணத்தால் திராவிடர் மங்கோலியப் பிரிவைச்சேர்ந்தவரென்பது "எத்னோலஜி" என்னும் மானுடவிகற்பநூலாசிரியர் முடிபாகவிருக்கின்றது. இவ்வாறு தமிழ்மக்கள் துரானியப்பகுப் பினராயிருந்தலால், ஆரியக்கூட்டத்தைச்சார்ந்த மக்களோடு அவர்கள் முற்றும் வேறுபட்டவரென்பது தெளிவாம். இதுபற்றியே ஆரியமொழியும் தமிழ் மொழியும் ஆதியில் ஒன்றற்கொன்றுயாதும் தொடர்பில்லையென்பது துணியக்கிடத்தலால், இம்மொழிகட்கு தொடர்புண்டென்று கூறுவோரது

* See Natural History of-Man—Astralians and Cromondalians. Vol. II; page. 486-487.

கூற்று முற்றும் பேதைமையின்பாலதே என்பது தெள்ளிதிற் றெளிந்த தொன்றும்.

தமிழ்மக்களது புராதனநாடு மத்திய ஆசியாவென்று பலரும் இப்பரதகண்டமே யென்று சிலரும் கூறுவர். இவ்விருகொள்கையுள்ளும் முன்னதே வலியுடைத்து. அஃது எது பற்றியோவெனில், தமிழர் மங்கோலியவகுப்பைச் சார்ந்திருத்தலாலும், சீனதேயத்திலுள்ள உயர்ந்த மேட்டுத்தரையில் வசிப்பதுபற்றிச் சீனர்தம்மை "வானவர்" (Celestials) எனவழங்கும் பெயரையே அங்குநின்றும் இங்குவந்த தமிழரசருள் ஒருவராய சேரரும் பெற்றிருத்தலாலும், சீனபாஷையில் "ழகர" ப்பிரயோகம் உண்மையாலும் சோழவகுப்பைச்சேர்ந்த திரையரில் சிலபிரிவினர் தம்மை சீனத்திரையர் என்னும் பேர்புனைந்து சாசனங்களில் வழங்குதலாலும், நீ, நான், யாம், பெண்முதலாய தமிழ்மொழிகள் சீனபாஷையிலும் காணப்படுதலாலும். பிறவற்றாலும் தமிழரின் ஆதிநாடு சீனமேயாகுமென்று, ஆங்கிலமும் தமிழுங்கற்று நமது பாஷாபிமானமே மேற்கொண்டு அப்பாஷையைப்பற்றின சரித்திர நுட்பங்களை தம் அரும் பெறல் ஆராய்ச்சி கொண்டு எழுதிய நூலால் பிறரும் எளிதில் அறிந்துகொள்ளுமாறு செய்தமாவுபகாரியாய மகா-ள-ள-ஸ்ரீ வி. கனகசபைப்பிள்ளையவர்கள் வெள்ளிடைமலைபோல் விளக்கியிருக்கின்றனர். சரித்திரவாராய்ச்சிவல்ல அறிஞர்பலர் ஆரியர் இப்பரதகண்டத்துப்புகுமுன் இங்கு வழங்கிய பாஷை யாதாம் என்றாராய்ந்துள்ளார். அவருட் பலர் தமிழ் மொழியே அதன் பூர்வபாஷையாகுமென்று தலைக்கட்டுகின்றனர். "வடவேங்கடந் தென்குமரியாயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்" என்றும், "நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும், தமிழ்வரம்பறுத்த தண்புனனாடு" என்றும் எல்லைகூறிப்போந்தனவெல்லாம் பல்லாயிரமாண்டுக்குப் பிற்பட்டெழுந்தனவேயாம். தமிழணங்கு ஆந்திரம் கன்னட முதலிய சேய்களைப் பிறப்பியாது தனியிளமை பெற்று விளங்கிய காலத்திலே, அந்நங்கை தனக்கு ஆடரங்காகக்கொண்ட பிரதேசம் "வடவேங்கடந்தென்குமரியாயிடை" யன்று: வடவிமயந்தென்குமரி யாயிடையே. அவ்வாறிளமைபெற்றிருந்த தமிழ் பின்பு ஆரியர் படையெடுப்புக்களால் அலைப்புண்டு, தன் ஆடரங்கைச் சுருக்கிக் கொள்ளவேண்டியதாயிற்று.

அன்றியும் அவ் வங்கியாது கூட்டுறவை வெறுத்து அத்தமிழ் நங்கையோடி யொளியுமிடங்கள் பலவற்றில், தான் பெற்ற சேய்களை அங்கங்கே விட்டுப்பிரியவும் நேர்ந்தது. இவ்வாறு தமிழணங்கு தம்மையஞ்சியோடி ஒளிவதுகண்ட ஆரியர் அந்நங்கைக்குத் "திராவிடம்" என்னுங்காரணப்பெயரை வழங்கலாயினர். (திராவிடம் என்னும் மொழிக்கு வடமொழியில் ஓடுதலுடையதென்பது பொருள்) தமிழ்நங்கை ஆங்காங்கே விட்டொழிந்த சேய்மொழிகள் பரதகண்டத்தின் பலவிடங்களிலும் ஆதியிற் றும்விடப்பட்ட நிலையில்நின்றும் சிறிது மாறுபட்டு இன்றுமுள்ளன. அவையெல்லாம் தம் ஆதித்தாயின் சொரூபத்தையே பெரும்பாலும் கொண்டிருக்கின்றன என்பர். அவற்றுள், பங்காளத்துக்கும் நேபாளத்துக்கும் இடையிலுள்ள பிரதேசத்தில் வசிக்கும் "திமல்" என்னும் புராதனமக்கள் பேசும் பாஷை தமிழோடு பெரிதும் ஒத்துள்ளது. இதுவன்றி வடமேற்குச் சிந்துநதிச்சமவெளியில் வசிக்கும் ஒருஜாதியாரது மொழியும், இராஜமஹால மலைப்பிரதேசத்து வழங்கும் பாஷையும், விந்தியமலையின் கீழ்முனையிலுள்ள சூடியநாகப்பூரில் வழங்கும் மற்றொருபாஷையும் நம்தமிழின் பாகதங்களாகவே இன்றும் உள்ளனவென்று தெரிகின்றது. இவ்வரலாற்றால் நாம் தெளிவாக அறிவதென்னவெனில், காலவரம்பு தெரியாதநாளில், தமிழ்மொழி இப்பரதகண்டத்தின் வடபாலிற் பரவியிருந்ததென்பதேயாம்· இவ்வாறுகூறுவது சிலர்க்கு புதுமையாகத்தோன்றுமாயினும், வேறுபல சான்றுகளும் இக்கொள்கையே உண்மையென்பதை வற்புறுத்துகின்றன. தமிழ்ப்பழங்குடித்தலைவராகியசேரசோழபாண்டியரையும் வேறுசிலசிற்றரசவகுப்பினரையும் பற்றி ஆராயின் இதன் உண்மைவிளங்கும். சேரற்குவானவன் என்றபெயரோடு, இமயவரம்பன் என்னும் வழக்குமுண்டு; இப்பெயர் அவர்கள் இமயமலைப்பக்கத்தே முன்னாளில் வசித்தவரென்பது குறிக்கும். இமயம்வரை தம் ஆட்சிசெலுத்தினவரென்னும்பொருள்பற்றி அப்பெயர் வழங்கலாயதெனக் கொள்வோமாயின், அங்ஙனமே புகழப்படும் சோழபாண்டியற்கும் அச்சொல்வழக்குமுண்டாகாது சேரற்கே அது வழங்குதலால் முற்காலத்து இமயமலைச்சார்பில் வசித்தமைபற்றியே இப்பெயர் அவர்க்கு உண்டாயிற்றெனக்கொ

ள்ளல் சிறப்புடைத்தாம். இனிச் சோழரினின்றும் பிரிந்த திரையர் என்பவர் பழங்காலத்தில் தொண்டைமான் என்னும் பட்டத்துடன் காஞ்சியில் இருந்து ஆட்சிபுரிந்தவர். புறநானூற்றில் வரும் தொண்டைமான் இளந்திரையன் என்பானும், இடைச்சங்கப்புலவரில் திரையன் மாறன் என்பானும் இவ்வகுப்பினரே. இத்திரையரில் பங்காளத்திரையர் என்னும் வகுப்பினரும் உண்டென்பது சாஸநங்களால் விளங்குகின்றது; இதனால் தமிழர் முற்காலத்து வடநாட்டிற் பரவியிருந்தார் என்பது உணர்தற்பாலது. இன்னுங்கன்னடதேசத்துவேளாளர் தங்களை கௌடரென்றும் கொங்குநாட்டு வேளாளர்தங்களைக் "கவுண்டர்" என்றும் வழங்குதல் தமிழராகிய அக்குடியினர் வடக்கிலுள்ள கௌடதேசத்தில் முன்புவசித்தவர்கள் என்பதைவிளக்குவன.

இவையன்றி, தமிழர் தம்நாடுநகரங்கட்கு இட்டிருக்கும் பழம் பட்டினங்களின் பெயரை நோக்கினும் இவ்வுண்மை உறுதியாம். முற்காலத்துப்பங்காளநாட்டின் தலைநகராயிருந்த சம்பாநகரின் பெயரைச் சோழர்கள் தம்தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினத்துக்கு இட்டிருப்பதும், வடக்கேயுள்ள மகதநாடு, சேதிநாடென்ற பெயர்களைத் தமிழர், சோழதொண்டை மண்டலங்கட்கிடையிலுள்ள நாட்டுக்கும், மலையமானாட்டுக்கும் முறையே வழங்கியிருத்தலும், வடபாலுள்ள மதுரையென்னும் பெயரைப்பாண்டியர் தந்தலைநகர்க்கு இட்டிருத்தலும், தமிழரசரும் தமிழரும்ஓர்காலத்துவடக்கிலிருந்துவந்தவரென்பதை வெள்ளிடைமலையென விளக்குவனவன்றோ! சுருங்கச்சொல்லின், விந்தியமலையின் தென்பாகத்தே தமிழரிற்பலர் அடைந்தகாலம், ஆரியர் படையெடுப்புக்குப்பின்பென்றே சொல்லலாம். அம்மலையின் தென்பிரதேசத்துள்ள மக்களை ஓடி ஒளித்தவரென்னும் பொருளுடைய "திராவிடர்" என்னும்பெயரால் ஆரியர் வழங்கியிருத்தலால், அத்தமிழ்மக்கள் முற்காலத்து ஓடாது தங்கியிருந்த தேசமொன்று வேண்டுமென்பதும், அது முற்கூறியவைகளால் வடதேசங்களேயாமெனவும் நாம் முடிவுசெய்யலாம். திராவிடதேசமென்பன:—கருநாடகம், தமிழகம், ஆந்திரம், கன்னடம் மகாராஷ்டிரம், கூர்ச்சரமென்பன. இவற்றுள் கூர்ச்சரம், மகாராஷ்டிரமென்னும் இரண்டும், முன்னாளில் "வேள்புலம்" என்னுந்தமிழ்ப்பெயர் பெற்றிருந்தன. பழங்காலத்தே திராவிடரெல்லாம் ஒரேமக்களாய் ஒரேமொழியை

வழங்கினராயினும் காலாந்தரத்தில் அவர்மொழி தெலுங்கு கன்னடம் மலையாளந்துளு எனச் சில வேற்றுமைபெற்றுப் பிரியலாயின. ஆயினும், அவை தமிழின்உருவத்தையே தம் ஆதியுருவமாகக்கொண்டுள்ளன.

ஆரியர் கூட்டம் முதலிற் சிந்துநதிபாயும் பிரதேசங்களிற்றங்கிப் பின் படிப்படியாய், அவர்கள் கங்கை யமுனைபாயும் பிரதேசங்களிற் பரவின செய்தி, ஆரியவேதங்களாலும் பிறவற்றாலும் தெளிவாய் அறியக்கூடியதே. அவர்பிரவேசித்த இடங்களிலெல்லாம், அங்கிருந்த பூர்வகுடிகள், குடியேறியவருடன் பெரும்போர்புரிந்தனரென்பது இருக்குவேத மந்திரங்களால் விளங்குகின்றன. இப்பூர்வகுடிகளை ஆரியர் தாஸர்என ஓர் பெயர்புனைந்து வழங்கினர். ஆரியருடன் இப்பூர்வகுடிகள் பெரும்போர்விளைத்தமைக்கு அடியில் வரும் இருக்குக்கள் தக்கசான்றாம்.

"அரியகாரியங்களை முடிப்பவனும் மிகப்பிரசித்திபெற்ற கடவுளுமான இந்திரன் ஆரியமனிதனை உயர்த்துகின்றான். வலிமையும் ஆற்றலும் வெற்றியுமுடையோனாய் அவன் அருவருக்கப்படுந் தாஸனைத் தலைகவிழச்செய்கிறான் (இருக்குவேதம், இரண்டாமண்டிலம், இருபதாவது பண்-சு.) விருத்திரனைக்கொன்றவனும் நகரங்களை அழிப்பவனுமான இந்திரன் அறிவில்மக்களான தாஸருடைய படைகளைச் சின்னபின்னமாக்குகின்றான்; அவன் ஆரியமனிதனுக்கென்றுநீரையும் நிலத்தையுஞ் சிருட்டித்து யாகஞ்செய்வோர் விரும்பியவற்றைத் தருகின்றான்" (ஷை-எ.)

"விரைந்து செல்கின்ற கரியதலைவன் அஞ்சுமதியாற்றங்கரையிற் பதினாயிரம் படைகளுடன் இருந்தான்; இந்திரன், உரத்துஊளையிடுகின்ற இத்தலைவன் இருப்பையறிந்து, ஆரியமனிதர் நன்மைக்காக அக்கொள்ளைக்கூட்டத்தாரை அழித்தனன்" (எழாமண்டலம், கூசு-வது பண், 13-பாட்)

"மேகத்திற் சூரியன் மறைந்திருத்தல்போல அஞ்சுமதியாற்றங்கரைப்பிரதேசங்களில் அக்கரிய தலைவன் ஒளித்திருத்தலைக்கண்டேன்" ஓமருத்துக்களே! நீங்கள் அவனுடன் மலைந்து அவனையழிக்

கும்படி விரும்புகின்றேன்" (ஷை-14) "அக்கரியதலைவன் பிறகு அவ் வஞ்சுமதி யாற்றங்கரையில் விளங்கத்தோன்றினன், இந்திரன் பிரகற்பதியைத் தன்னுடன் கூட்டிக்கொண்டுபோய் இரக்கமில்லாத அப்படையை அழித்தனன் (ஷை-கரு) என்பவைகளே.

இவ்வாறு, ஆரியர்புகுமுன் இந்நாட்டில் பூர்வகுடிகள் இருந்தனரெனவும், அவரை அவ்வாரியர் வென்றடக்கிவந்தனரெனவும் வேத மந்திரங்கள் தெரிவிக்கின்றன. இப்பூர்வகுடிகள் முன்பு பாதகண்டமெங்கும் பரவியிருந்த தமிழரே என்பது சரித்திரவறிஞர் பலரது துணிபு. சாதிப்பிரிவேற்பட்டகாலத்தில் பிரமக்ஷத்திரியவைசியரென்பவர் தம்மவராதலால் அவர்வேதமோதல் முதலிய ஆரியாசாரத்துக்குரிய "துவிசர்" எனவும் இந்நாட்டுப் பூர்வகுடிகள், தம்மினத்தாரன்மையால், அம்மூவர்க்கும் அடிமைத்தொழில் செய்தற் குரிய நான்காஞ்சாதியினரெனவும் ஆரியர் வகுத்துக்கொண்டனர்.

இவர்கட்கு "சூத்திரர்" என்றபெயரேற்பட்டதோடு அடிமைத்தொழிலன்றி வேறெவ்வித மேம்பட்ட தன்மைக்கும் அவர் உரியல்லரென்றும் ஆரியர் விதித்தனர். இவர்கள், ஆரியருடைய அறிவாற்றலுடன் மாறுபடமுடியாதவராய் அவரிட்ட சட்டத்திற்கெல்லாம் உள்ளாயினர்போலும். ஆரியர்க்குப்பணியாமலும், அவரது அறிவு வலிமைகளுக்கு ஆற்றாமலும் ஓடி ஒளித்த பூர்வகுடிகளாய தமிழரும் அவர் தலைவர்களும் முடிவில் ஆரியர் அறியாதிருந்த, விந்தியமலையின் தென்பாகத்தேயடைந்து அங்கே தமக்கு வேண்டிய தானங்களையமைத்துத் தம் தலைவரின்கீழ் அமைதியுடனிருந்தனர். முன்னுளில் ஆரியாவர்த்தமென்பது, இமயவிந்தியமலைக்கிடையிற் கங்கை யமுனை பாயும் பிரதேசமென்றும், அப்பரிசுத்தபூமியை நீங்கி விந்தியத்தின் தென்பாகம் முதலிய அபரிசுத்த நாடுகட்குச்சென்றுவரும் ஆரியன், அப்பாவத்திற்காகப் "புனஸ்தோமம்" அல்லது "சர்வபிரஷ்டோமம்" செய்துகொள்ளக்கடவனென்றும் ஆரியவொழுக்க நூல்கள்விதிக்கின்றமையால், இந்தியதேசம் முற்காலத்தில் ஆரியர்புகுந்தறியாத தென்புதுத் தேசமாம்.

(தொடரும்.)

இங்ஙனம்,

பொ. பாண்டித்துரை.

MANUSCRIPTS